THE COUNTRY HERALD

கிராம தூதன்

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை

" வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | **1941, டிசம்பர்—விசு, மார்கழி** | இதழ்: ௰௨

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை

தாண்டவனே ஞான தயாபரனே *என்ற சந்தம்*

இராகம்: கமாஸ் *தாளம்: ஆதி*

ஆண்டவனே உன்னை அடி பணிந்தோம்
அருள்தா—அருள்தா—அருள்தா—குருவே (ஆண்டவனே)
வேண்டினமே சம அன்பு அளித்திட
வேற்றுமை என்பதைத் தீர அகற்றிட (ஆண்டவனே)
ஒன்றாய் நின்றாய் ஒருவனு மானாய்
உண்மை அறிந்திட உலகினில் நன்றாய் (ஆண்டவனே)
அனைவரும் ஒன்றாய்ச் சேர்த்திடுவாய்
சோதர வாஞ்சையை ஊட்டிடுவாய்
சுயநலச் சுவரைத் தகர்த் தெறிவாய்
ஒற்றுமை நீங்கா உணர் வளிப்பாய் (ஆண்டவனே)
உலகின் நன்மைக் குழைத்திடல் வேண்டும்
உனை மறவாதினம் போற்றிடல் வேண்டும்
அச்சமும் துன்பமும் அகலவே வேண்டும்
அவனியில் இனி நாம் ஆனந்தமடைய (ஆண்டவனே)

விரதச்சாரி விதிக்கோவை.

விவசாயிகளே! எழுந்திருங்கள்! சோம்பலை ஒழியுங்கள்! கிராமதூதனுக்குச் சந்தாதாரர்களாகச் சேருங்கள்! விளைவை விரும்பி விருத்தியாக்குங்கள்!

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்

I. ஆணுக்குப் பெண்ணடிமை யகல வேண்டும்—பாரில்
அறநெறி அறிந்தொழுக வேண்டும்;
வீணுக்கு வுயிர்வாழ் வொழிய வேண்டும்—நாடு
உயர்நிலை யடைய வேண்டும்;
பூணுதற்குப் பொன்னல்ல கலை வேண்டும்—புவிதனில்
பூவையர் முன்னேற வேண்டும்;
பேணுதற்குக் கற்புநிலை யென்றும் வேண்டும்—மாதர்
கைத்தொழில் புரிந்துய்ய வேண்டும்.

-திருவாட்டி நல்லபாய் செல்லையாபிள்ளை.

II. 1. *தன் வாழ்க்கையில் காணும் குறைகளைக் கவனித்து அவற்றை நீக்கிக்கொள்ளக் கூடாதவன் எவனும் உலகின் குறைகளைக் கவனித்து அவற்றை நீக்கக்கூடியவனல்ல.*

(The Victorious Life.) Dr. Stanley Jones.

2. *அழுக்கிலே பழகிவிட்டால் சுத்தத்தின் மேன்மை தெரியாது. சுத்தமாயிருக்கப் பழகினால், அழுக்கின் இழிவு நன்றாய் விளங்கும்.*

(The Victorious Life.) Dr. Stanley Jones.

3. *ஒரு காரியம் சரியென்பதை ஒருவன் கண்டறிந்தவுடனேயே அவன் அதனை உறுதியாக மாற்ற முடியாதபடி, தீர்மானித்துவிடவேண்டும்; தீர்மானித்த பிரகாரமே நடந்துதீரவேண்டும். அதனை விட்டு விலகக்கூடாது. அவ்வழியிலேயேதான், அதிகமதிகமாய் முயலவேண்டுமெனத் தன்னை வற்புறுத்தும் ஒரு நிலைமைக்குத் தன்னைக் கொண்டுவரவேண்டும்.*

Dr. Stanley Jones.

III. *ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டின் மொழியோடு ஒன்றுபட்டுக் கிடக்கின்றது. எந்த மொழி உயர்ந்த கருத்துக்களையும், தூய நெறியினையும் மக்களுக்குப் போதித்துப் பயன் தரக்கூடியதாக இருக்கின்றதோ, அம்மொழியே சிறந்ததொரு மொழியாகும். அவ்வாறு சிறப்புற்று விளங்கும் மொழிகளுள் நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் உயரியது.*

இலக்கியத்தருக்கள் சாதாரணமான தருக்கள் போன்றவையல்ல. கற்பகத் தருக்களை நிகர்ப்பன. வேண்டுவோர் வேண்டும்பொழுது மணக்கும்; கருதுவார் கருதும்பொழுது கனியும். தனித்திருந்து சிந்திப்பார்க்குத் தனிமையகற்றும். துணையற்றார்க்கு உறு துணையாகும். கூட்டமாக இருந்து ஆராய்வார்க்குக் கொள்ளக் கொள்ளக் குறையாது கொடுக்கும்.

நம்மவர்களிடத்தில் காணப்படும் மடி மடியவேண்டும். ஊக்கம் வீறிட்டு ஓங்கவேண்டும். தமிழ் அன்னை எவர் நாவிலும் தாண்டவமாடவேண்டும். எவர் உள்ளமும் தமிழ்ப் புலமாக வேண்டும். எண்ணுவதும், பேசுவதும், இயற்றுவதும் தமிழ் மயமாக இருக்க வேண்டும்.

தமிழ்க்கலை யாக்கத்தைப் பற்றி நம் கருத்துக்களை வற்புறுத்த வேண்டும். தமிழின் உயர்வையும் அதன் கௌரவத்தையும் பாதுகாப்பது அதன் மக்களுடைய கடமை அல்லவா?

திரிசிரபுரம் நாராயணசாமிப் பிள்ளை.

3. தலையங்கம்:

பிறரை நம் வயப்படுத்துவதும் நம் நண்பராக்குவது மெப்படி?

How to win friends and influence People? By Dale Carnegie*

(சாரம்) II

5. பிறரை நம் வழிக்குத் திருப்புவதேப்படி?

விவகாரப் பிரியர்களோடு விவகாரம் பேசி, அவர்களைத் திருப்பவும் முடியாது; விவகாரம் தெரியாதவர்களிடம், விவகாரத்தை எடுத்துச் சொல்லுவதிலும் பயனில்லை. விவகாரத்தால் காரியம் கைக்கொண்டவர் எவருமில்லை; ஆகையால், எவரும் நம்மிடம் விவகாரம் பேச வந்தாலும் அதற்கிடங்கொடாமல், கழித்துவிடுவதே நல்லது. பகைமையைப் பகைமையினால் ஒழிக்கக்கூடியதில்லை. அன்பினாலேயே ஒழிக்கக்கூடும். அதுபோலவே, விவகாரத்தையும் விவகாரத்தால் ஒழிக்கக் கூடியதில்லை. எவரும் நம்மைப்பற்றித் தப்பெண்ணம்கொண்டாரென்றால், அவருக்கு நாம் நியாயங்களை எடுத்துச் சொல்லுவதால், அந்தத் தப்பெண்ணத்தை அவர் மாற்றிக் கொள்ளமாட்டார். அவர் கருத்தைத் தெரிந்திருப்பதாகவும், கூடுமானால் அதன்படியே நடக்கவும் நாம் ஆசை கொண்டிருப்பதாகவும் அவருணரும்படி நாம் வினயமாக நடந்து கொண்டால், அந்தத் தப்பெண்ணம் தானே மறையவுங்கூடும்.

நம்மில் அநேகர் அகம்பாவம் சந்தேகம் பயம் பொறாமை கொண்டிருக்கலாம்; பிறரைப் பற்றியும் பிறர் காரியங்களைப்பற்றியும் தப்பாக எண்ணிக்கொண்டிருக்கலாம்; அப்படிப் பட்டவர்களிடம் நாம் உண்மையைச் சொல்லப் போனோமென்றால், அது நம்மைச் சங்கடத்திலே கொண்டுபோய்விடவுங்கூடும். பிறர் கருத்து மரியாதைக் குரியதாக இருந்தால், அதற்கு நாம் மரியாதை தரவும் வேண்டும்; அவர்கள் கருத்தோடு செய்கையோடு இணங்கக்கூடியபொழுது, நாம் இணங்கவும் வேண்டும்; ஆனால், அவர்கள் சொல்லுவது செய்வது பிசகாக இருந்தால், அதனைப் பிசகென்று மட்டும் பச்சையாகச் சொல்லிவிடக்கூடாது.

பிறரோடு சண்டை போடுவதால், பயனேயில்லை. அதுவும், நம் பேரில் குற்றம் இருக்கும்பொழுது, சண்டை போடவே கூடாது. நம் குற்றத்தை ஒப்புக்கொள்ளவும் வேண்டும்; அதனை விரைவாகவும் தெளிவாகவும் செய்திட வேண்டும்.

நமக்கும் பிறருக்கும் பல காரியங்களில் ஒற்றுமை யிருக்கும்; சிலவற்றிலேயே ஒற்றுமை யிருக்கலாம். வேற்றுமையின் கசப்பை மாற்ற இனிமையாலேயே முடியும். ஒரு துளி தேனும் தன்னிடத்திற்குப் பல ஈக்களை இழுக்க முடியும். வேப்பெண்ணெய் குடங்குடமாக இருந்தாலும், அதனிடத்திற்கு ஈக்கள் வரா. பிறரோடு பேச ஆரம்பிக்கும் பொழுதே இனிமையாகப் பேசவேண்டும். எந்தக் காரியம் செய்வதென்றாலும், அதனைக் களிப்புடனேயே செய்து முடிக்கவேண்டும்.

மெதுவாகப் போகிறவன் வெகுதூரம் போகமுடியும். நாம் பிறரோடு பேசும் பொழுது அவர் ஆம் ஆம் என்று சொல்லும் படியாகவே பேசி வந்தால், கடைசியாக நம் கோரிக்கைக்கும், அவர் ஆமென்றே சொல்லி முடிப்பார்.

நம்மை நம் சிநேகிதரை நம் வேலைக்காரரைப்பற்றி எவரும் புகார் சொல்ல வந்தால், அவர்களை இடை மறித்துப் பேசாமல், அவர்கள் மனம்போல் பேசவிட்டு விடவேண்டும்.

பிறகு, அவர்களுக்கு நாம் பதில் சொல்லுவதும் எளிதாகும். அவர்கள் மனம்போல் நாம் செய்யமுடியாதுபோனாலும், அதற்காக அவர்கள் வருத்தப்படமாட்டார்கள். நாம் நம் சிநேகிதர்களுக்கும் மிஞ்சியவராகத் தோற்ற விரும்பினால், நம் சிநேகிதர்களும் நமக்கெதிரிகளாகி விடுவார்கள். தம்மைப்பற்றி நம்மிலும் கேவலமாக நினைக்கும்படியாக நம்மால் நேரும்பொழுது, அவர்கள் அதனை எளிதில் மறக்கமாட்டார்கள்; நம் பேரில் ஆகூயையும் பொறாமையும் கொள்ளுவார்கள்; நமக்குக் கெடுதியும் செய்ய ஆரம்பிப்பார்கள். நம்மடக்கத்தையும் பணிவையும் நம் நண்பர்களாலும் வெல்ல முடியாது.

நாமெதொரு காரியத்திலும் பிறர் உதவியை விரும்பினால், அவருடைய யோசனையையும் கேட்கவேண்டும். அப்படி நாம் அவரை மேவிப்போவதாக இருந்தால் மட்டும், அவருடைய உதவி நமக்குத் தாராளமாகக் கிடைக்கக் கூடும்.

எதொரு காரியத்திலும், அடுத்தவர்கள் என்ன நினைக்கிறார்கள்? ஏன், அப்படி நினைக்கிறார்கள்? என்பதையும் தெரியவேண்டும். அப்படித் தெரிந்தால் தான், அவர்களோடு தன்மையாகப் பழகமுடியும்; அப்படித் தன்மையாகவும் பழகிவந்தால் தான், நம்முடைய காரியங்களுக்கும் நல்ல உதவி கிடைக்கும்.

பிறர் நம்மைப் பற்றியோ பிறரைப் பற்றியோ வருத்தப்படும் பொழுது, நாமும் அவருடைய நிலைமையில் அந்த மாதிரிதானிருக்கக் கூடுமென்றால், அதனை ஒளிவு மறைவின்றித் தாராளமாக நாம் அவரிடம் சொல்லவும் வேண்டும். அப்பொழுது, அவர், தம்மிடம் நாம் அநுதாபங் கொண்டிருப்பதையும் உணர்வார். நமக்குக் கோபம் வரும்பொழுது, பிறரிடமுள்ள அநுதாபத்தால் அதனை அடக்கிக்கொண்டோமென்றால், பிறர் கோபமூட்டியும் அவருக்கு நன்மை செய்வோமென்றால், அவற்றைப் பிறர் எளிதில் மறந்துவிட முடியாது. அவற்றிற்குப் பின்னேனும், அவர் திட்டமாக நமக்குதவியாக இருப்பார்.

பிறரை நாம் குறைவாக நினைக்கக் கூடாது. எவரிடமும் சிறந்த குணங்களில்லாமலில்லை. அவருடைய சிறப்பையே பெரிதாகக் கருதி, அவரை மனிதராக மதித்து அவரோடு பேசிப் பழகிவர வேண்டும். அப்படிப் பேசினால், அவரிடம் நாம் கோரிப்போன காரியம் அவருக்கு வெறுப்பை வருத்தத்தைத் தரத்தக்கதாக இருப்பினும், நம் மனம் போலவும் நிறைவேற்றக் கூடும்.

நாம் பிறரிடம் சொல்லுவதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அவருக்கு மனதில் நன்றாகப் பதியும்படி யாகவும் சொல்லவேண்டும். நாடகத்தில் பார்ப்பது போல கேட்பது போல நம்முடைய கருத்துக்கள் அவருடைய மனதில் பதியவேண்டும். அப்படிப் பதிந்தால் தான், அவருக்கு நம் காரியத்தில் ஈடுபடவேண்டுமென்றும் தோன்றும்.

ஆர்வத்தோடு கூடிய புத்திசாலிகளோடு நாம் பேசும் பொழுது, அவர்கள் வேறு வகையாக நம் கருத்துக்கு இணங்கி வராமற் போனாலும், நாம் சொல்லுகிறபடி செய்வதற்கில்லையென்றால், அவர்கள் தான் எப்படிச் செய்து முடித்துவிடக் கூடும்? என்று வீராவேசம் பிறக்கும் படியாக அவர்களை நாம் கேட்பதனால், அவர்கள் நம் கருத்துக் கிணங்கிவிடவுங் கூடும்.

6. பிறருக்குக் கோபத்தை மூட்டாமல் அவருடைய வருத்தத்தைக் கிளப்பாமல் நம் காரியத்தை முடிப்பதெப்படி?

பிறரைக் குற்றஞ் சொல்ல நேரும் பொழுது, அவர்களுடைய திறமையையும் குணங்களையும் சிலாகித்துப் பேசி இப்படியொரு குற்றமும் நேர்வானேனென்று சொல்லுவோமென்றால், அவர்கள் அதற்காக வருத்தப் படவுமாட்டார்கள்; அம்மட்டில் தங்களைத் திருத்திக் கொள்ளவும் செய்வார்கள்.

பிறர் குற்றங்களைப் பச்சையாக எடுத்துப் பேசாமலும், அவர்கள் அவற்றை உணரும் படி செய்துவிடலாம். அப்படி உணரும் பொழுது, அவர்கள் நம்மேல் வருத்தப்படவு மாட்டார்கள்.

பிறர் குற்றங்களைப் பற்றிக் குறை சொல்லு வதற்கு முன், அவைபோன்ற நம் குற்றங்களை யும் எடுத்துச் சொல்லி, எவரும் பிசகக்கூடியது தானென்பதாக ஆற்றி, இருந்தாலும் இந்த மாதிரி செய்திருக்கப்படா தென்று முடித்து விடலாம். இப்படிப் பேசுவதாலும், பிறருக்கு வருத்த முண்டாகாமலே நம்முடைய காரியம் நிறைவேறிவிடும்.

எவரையும் இப்படிச் செய் அப்படிச் செய்யென்று கட்டளையிடாமல், இப்படிச் செய் யலாமா? அப்படிச் செய்யப்படாதா? என்று கேட்பதனாலேயே நம் கோரிக்கை விரைவாக வும் நல்ல மாதிரியாகவும் நிறைவேறிவிடும்.

பிறர் மனக் கவலையோடிருக்கும்பொழுது, அதனைப்பற்றி மென்மேலும் கேட்டு அவர் மனதைப் புண்ணாக்காமல் எவருக்கும் அந்த மாதிரிச் சங்கடங்கள் வருவதுதானென்று அவ ரைத் தேற்றவேண்டும். அப்படித் தேற்றுவ தால், நம் காரியங்களில் அவர் பின்னும் அதி கக் கவனமே செலுத்தக் கூடும்.

பிறர் செய்கிற காரியங்களில் நமக்கிருக் கும் திருப்தியைத் தெளிவாகச் சொல்லுவ தோடு, அவற்றில் சிறு அபிவிருத்தியைக் கண்டாலும், அவரை உண்மையாக நாம் போற்றும்பொழுது அவர் பின்னும் அதிக அக்கறையுடனேயே அவற்றைச் செய்து முடிக்கக் கூடும். புகழ்ச்சியைப் போல், ஒருவர் திறமையைத் தூண்டுவதும் அதனை அதிகப் படுத்துவதும் வேறெதுவுமில்லை.

எதனையும் நாயென்று பழித்து அதனை அடித்துக் கொல்லுவதைக் காட்டிலும், அதற்கு நல்ல பெயரைக் கொடுத்து வாழச் செய்வதே மேல். எவரையும் யோக்கியராக வாழவேண்டு மென்று உற்சாகப்படுத்திவிட்டால், அந்தப்படி வாழ வேண்டுமென்ற ஆசையுடன் அவர் அப் படியே வாழவுங் கூடும்.

பிறரிடம் குற்றம் காணும்பொழுது அந் தக் குற்றத்தை எளிதாகத் திருத்திவிடக் கூடும் என்று உற்சாகப் படுத்தி அதற்கு வழி யும் சொன்னால், அவர் அப்படியே அதனைத் திருத்திவிடவுங் கூடும்.

நாம் சொல்லும் காரியம் அதனைச் செய் கிறவர் மகிழ்ச்சியோடும் செய்யக் கூடியதாயி ருக்க வேண்டும்.

---

4. வேளாண்மை:

நெல்லுக் குரமிடுதல்

Chapter XI Rice in Madras, By Ramiah

(சாரம்) III

குழை உரத்தின் பயன்

காலகம் பதினாயிரத்தில் ஏழு பங்கும் எரிகக்காடி 6 பங்குமாக இருக்கும் சாதாரண வளம்பொருந்திய பூமிக்குக் குழையுரம் அவ சியமாகும். குழை யுரத்தினால் பெறும் அதிக விளைவு இடத்துக்கு இடம் வெவ்வேறாக இருக் கிறது. சாதாரண நிலைமைக்கும் அதிக வளம்பொருந்திய நிலங்களில் 8 முதல் 10 சதமே விளைவு அதிகமாகிறது. சத்துக் குறைந்த நிலங்களிலும் சாதாரண வளமே பொருந்திய நிலங்களிலும் ஏக்கருக்கு 3000 முதல் 4000 இராத்தல் இலைக்குழையே போடுவதாக இருப்பினும் 20 முதல் 25 சதம் வரை அதிகமாக விளைகிறது. மழை சரியாக இல்லாத காலங்களில் குழை உரத்தின் பயன் இன்னும் அதிகத் தெளிவாகக் கூடத் தெரி

யும். சாதாரணமாக ஏக்கருக்கு 2000 இராத்தல் நெல் விளைந்துகொண்டிருந்த கோயம்புத்தூர் நன்செய்களில், இப்பொழுது 4000 இராத்தல் வரை விளைகிற தென்றால், அது நெல்லுக்குப் பிறகு தவறாது பசுந்தாளுரப்பயிர் சாகுபடி செய்து வருவதன் பயனேயாகும். பெல்லாரி ஜில்லா ஆசுப்பேட்டையில் (Hospet) ஓராண்டு நெல்லும் மறு ஆண்டில் கரும்புமாக மாறிமாறிச் சாகுபடி செய்யப்படுகின்றன. கரும்பு, நிலத்தின் சத்தை வெகுவாக வாங்கும் பயிராக இருந்தும், நெல்லுக்கும் கரும்புக்கும் இடையேயுள்ள காலத்தில் பசுந்தாளுரமாகிய சணல் பயிர் (Sunn hemp) வழக்கமாகப் பயிரிட்டு வருவதால் ஏக்கருக்கு 3000 இராத்தலுக்கு மேலாகவும் நெல் விளைகிறது.

குழையுரம் போடவேண்டிய அளவும் இடத்துக்கிடம் மாறுகிறது. நிரம்பவும் அதிகமாகப் போடுகிற தென்றாலும் ஏக்கருக்கு 4000 முதல் 5000 இராத்தலுக்கு மேலாகப் போடவேண்டியதில்லை யென்று சொல்லலாம். என்றாலும், சில இடங்களில் 4000 முதல் 6000 இராத்தல் வரை போட்டும் அதற்குத் தக்கபடி அதிகமாக விளைந்திருக்கிறது. சத்துக் குறைந்த நிலங்களுக்குத் தொடர்ந்து ஏக்கருக்கு 6000 முதல் 8000 இராத்தல் வரை குழையுரமிட்டும், எலும்புமா (bone meal) மேற்காடி எரிகை (Super phosphate) போன்ற எரிய உரங்களையும் சேர்க்காதபொழுது விளைவு வெகுவாகக் குறைந்தே யிருக்கிறது.

சாதாரணமாக உரத்திற்காகச் சணல் பயிரிடுவதா, கல்லுப் பயற்றஞ்செடியை வளர்ப்பதா? என்பதையே நாம் நிதானித்துக்கொள்ள வேண்டும். இலேசான உவருள்ள நிலங்களுக்கும் கனத்த நிலங்களுக்கும் தக்கைப் பூண்டு பொருந்தும். சத்துக் குறைந்த நிலங்களுக்கும் செவ்வலாக அல்லது மணற் சாரியாகவுள்ள நிலங்களுக்கும் கொழிஞ்சி பொருந்தும். மலையாளத்து நிலங்களுக்குத் தட்டாம் பயற்றஞ் செடி போல வேறு எதுவும் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. இயற்கைச் சாயத்திற்காக, தென்னாற்காடு ஜில்லாவிலும் விசாகபட்டினம் ஜில்லாவிலும் அவுரி பயிரிட்டு வந்தபொழுது அதன் கழிவு உரமாகப் போட்டுவரப்பட்டது. அதனால் நல்ல பலனுமிருந்து வந்தது. இப்பொழுது அவுரி அதிகமாகப் பயிரிடுவதில்லை. பயிரிடப்படும் சில இடங்களிலேயே அதன் கழிவு உரமாகப் போடப்பட்டுவருகிறது.

பசுந்தாளுர முண்டாவதும் இடத்துக்கிடம் வெவ்வேறு விதமாக இருக்கிறது. சாதாரணமாக, ஏக்கருக்கு 8000 முதல் 10000 இராத்தல் வரை உண்டாகும். மறுதேரிலும் கோயம்புத்தூரிலும் இருப்பது போல் சௌகரியமாக இருந்தால், சணல் பயிரும் கல்லுப் பயற்றஞ் செடியும் ஏக்கருக்கு (இருபதினாயிரம்) 20000 முதல் 30000 இராத்தல் வரை யுண்டாகும். அப்படி நிலைமையில் ஒரு ஏக்கரிலுண்டாகும் பசுந்தாளுரம் ஐந்தாறு ஏக்கருக்குப் போதும். சௌகரியமாக இருந்தால், தக்கைப் பூண்டும் ஏக்கருக்கு 15000 முதல் 20000 இராத்தல் வரை யுண்டாகக் கூடும். ஆனால், அதன் தண்டுகள் மரமாகத் தடித்துப் போகின்றன. அவற்றை வெட்டித் தறிப்பதும் நிலத்தோடு மடிக்கச் செய்வதும் சிரமமாய் விடுகின்றன. பசுந்தாளுரத்தின் பலன் அதன் அளவை மட்டும் பொறுத்ததல்ல. அதை நாம் எளிதாகப் பிடுங்கிச் சேகரிக்கக் கூடியதாயும் இருக்கவேண்டும்; எளிதாக நிலத்தில் சேர்க்கக் கூடியதாகவு மிருக்கவேண்டும். மரமாகத் தடிக்கக் கூடிய தக்கைப் பூண்டையும் காலப் பிற் பாடாகவும் நெருக்கியும் விதைத்தால், அப்படி அதிகமாகவும் தடித்திடாது.

பசுந்தாளுரத்திற்காக ஏற்படும் செலவு.

பசுந்தாளுரத்திற்காக அதிகம் செலவாவதில்லை. நெல்லுக்கு, அதனைக் காட்டிலும் செட்டான உரம் காணக் கூடியதில்லை. பசுந்தாளுரம் பயிராக்க ஏக்கருக்கு 7 ரூபா முதல் 30 ரூபா வரை ஆகக் கூடும். இறைவைச் செலவேற்பட்டாலும் 25000 இராத்தலுக்கு மேல் பசுந்தாளுரம் கிடைக்கிறதென்றாலும் தான் அப்படி அதிகமாகச் செலவாகும்.

சராசரி 1000 இராத்தல் 7 அணு முதல் 1 ரூபா வேயாகும். ஏக்கருக்கு 4000 இராத்தல் போடுவதென்றாலும் 4 ரூபாவுக்கு மேலாகாது. இந்த 4000 இராத்தல் கொடுக்கக்கூடிய பயன் வேறு வகையில் நாம் சாதாரணமாகப் பெற்றுக் கொள்ளமுடியாது. வெளியிடங்களிலிருந்து குழை கொண்டுவர 1000 இராத்தலுக்கு 3 ரூபா முதல் 5 ரூபா வரை செலவழிக்கிறார்கள். பசுந்தாளுரத்திலிருக்கும் காலகம் நேராகப் பயன் படுவதில்லை யென்றாலும், நவச்சிவயக் கந்தகை போன்ற (Sulphate of ammonia) வேதி (chemical) உரங்களின் வேலைபோன்றதாகவே இதன் வேலையுமிருக்கிறது. நவச்சிவயக் கந்தகை போன்ற உரத்திலும் குழையிலும் உள்ள காலகத்தை அளவிட்டுப் பார்க்கும் பொழுது குழையிலுள்ளதில் 6ல் ஒரு பங்கு முதல் 8ல் 1 பங்கு வரைக்கே வேதி யுரத்திலிருக்கக் காண்கிறோம். (இது 1937ம் ஆண்டிலெழுதியது. இப்பொழுது வேதி யுரங்களின் விலை பல மடங் கேறியிருக்கிறது. ப-ர்)

(தொடரும்)

---

5. கூட்டுறவு :

கடன் விற்பனைச் சங்கம்

முன்யோசனையோடு கூடிய திட்டத்தை யனுசரித்து முறையாகத் துயர்ந்து வேலை செய்து வந்தால் மட்டும், கூட்டுறவுச் சங்கங்களும் பயன் படக்கூடும். (plan the work and work out the plan) நம் மாகாணத்தில் அப்படி வேலை செய்து வருவதாகச் சொல்லுவதற்கில்லை. "மூன்று குளத்தில் இரண்டு குளம் பாழ்; ஒன்று தண்ணீரேயில்லை" யென்ற கதையாக, மூன்றிலிரண்டு பாகம் பாழடைந்திருக்கின்றன; பாக்கி பாகத்திலும் சிலவே துயர்ந்து முறையாகவும் பலருக்கு நன்மையாகவும் வேலை செய்து வருகின்றன; பிற சங்கங்களெல்லாம் மேடைப் பிரசங்கங்களிலும் கட்டடம் புகைப் படம் திறப்பு விழாக்களிலும் தேநீர்க் கச்சேரிகளிலும் விளைந்து சில காலம் ஆரவாரத்துடன் வேலை செய்யவும் அல்லது ஒரே தூக்கமாகத் தூங்கவுமாக இருக்கின்றன.

நம் மாகாணத்திலும் கடன் சங்கங்களே நிறைந்திருக்கின்றன; அவற்றில் பெரும்பாகம் வேலை செய்யாது நின்றும் முடிவு கட்டப்பட்டும் வருகின்றன. உழவர் விளைவை பெருக்குவதற்கெனச் சில சங்கங்களே இருக்கின்றன. அவற்றின் வேலையும் அத்துணை திருப்திகரமாகச் சொல்லுவதற்கில்லை. விபசாய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் பல கடன் விற்பனைச் சங்கங்கள் நம் மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றில், எதுவேனும் முன் யோசனையோடு கூடிய திட்டத்தை யனுசரித்து அமைக்கப்பட்டதாகவும் சொல்லுவதற்கில்லை. ஆகையால், அவை யெல்லாம் கடன் சங்கங்களாக மட்டுமே வேலை செய்து வருகின்றன. விலைப் போகாத பொழுது சங்கத்தில் கொண்டு வந்து வைத்து கடன் வாங்குவதும், பிறகு நல்ல விலை கிடைக்கும் வரை காத்திராமல், என்ன விலை கிடைத்தாலும் அந்த விலைக்குச் சமுசாரிதானாக நேரில் விற்றுச் சங்கக் கடனைச் செலுத்திச் சரக்கை எடுத்துக் கொண்டு போவதும் சமுசாரிக்கு நல்ல இலாபம் தரக்கூடியதில்லை. ஆனால் இப்பொழுது அனேகமாக இந்த மாதிரியேதான் நடந்து வருகிறது.

உழவர்கள் தங்கள் விளைபொருள்களைத் தனியே விற்கும் பொழுது குறைந்த விலைக்கே விற்க முடிகிறது. தனியே வாங்கும் பொழுதோ அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டியதிருக்கிறது. கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கூட்டாக விற்பதென்றாலும் அதிக விலை கிடைக்கும்; கூட்டாக வாங்குவதென்றாலும் சௌக்கியமாக வாங்கலாம். இதனை அவர்கள் உணரவேண்டும். சங்கத்தின் நிரு

வாகமும் வியாபார அனுபவமுமுள்ளவர்கள் கையிலிருக்கவேண்டும். விளைபொருள்களைத் தரம் பிரித்து விற்கவேண்டும். எதாமொரு பொருளின் பேரில் கடன் கொடுக்கவும் விற்கவுமாக இருந்து நல்ல அனுபவம் பெற்ற பின்னரே பின்னும் சில பொருள்களையும் ஈடு பெறவும் விற்கவும் ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவைகளைச் சங்கத்தின் மூலமாக உதவுவதென்பதையும் கையாள வேண்டும்.

நம் மாகாணத்தில் விளையும் தானியங்கள் நம் மாகாணத்திற்கே போதியனவாக இருப்பதில்லை. நம் மாகாணத்திலும், சில சில ஜில்லாக்களிலேயே மிகுதியாக விளைகின்றன. அப்படி விளையும் ஜில்லாக்களிலும் சிறு சிறு நிலக்காரர்களே அதிகமாக இருப்பதால், அவர்களிடம் தானியம் விற்பதற்கும் மிஞ்சுவதில்லை. விற்பதற்கு மிஞ்சக் கூடிய பெரிய சமுசாரிகளும் கிராமத்துக்கு இரண்டொருவரே இருக்கக் கூடும். அவர்களுக்காகப் பெரும் பரப்பிற்கொரு சங்கமும் அதற்குப் பல கிளைச் சங்கங்களும் அமைப்பது சரியாகாது. அப்படிச் சமுசாரிகள் கிராமச் சங்கங்களிலும் உறுப்பினராக இருந்து தாங்கள் ஈடுவைக்கும் தானியத்தையும் தனி இடத்தில் வைத்துச் சங்கத்திலும் ஒருசாவியை ஒப்புவிக்கக் கூடுமென்றால், அத்தானியம் அதிகமாக அழியக்கூடிய சந்தை யிருக்கும் ஊரில் பக்கக் கிராமச் சங்கங்களெல்லாம் சேர்ந்து ஒரு மத்திய சங்கத்தையும் அமைத்துக் கொண்டு அதன் மூலம் விற்பனை செய்து வரலாம். அந்த மத்திய சங்கம் கிராமச் சங்கங்களில் விற்பனைக்காக இருக்கும் தானியம் பூராவையும் மொத்தமாகக் கிரயம் பேசவும் விற்கவும் முடியும்.

பருத்தி நிலக்கடலை போன்ற வியாபார விளைபொருள்களை விற்பனை செய்வதற்காகத் தனி நபர் சங்கங்கள் இருப்பதே உசிதமாகும். அவசியமானால், பல கிளைச் சங்கங்களையும் அமைத்துக்கொள்ளலாம். அப்படிச் சங்கத்திலும் பெரிய சமுசாரிகள் அதிகமிருந்தால்தான் நல்ல இலாபமடைய முடியும். விற்பதற்கு நிறைய விளைபொருள்களும் அவர்கள் கொண்டுவரவேண்டும். அதனைச் சாவகாசமாக விற்றுக்கொள்ளலா மென்ற நிலைமையிலும் அவர்களிருக்கவேண்டும். ஒரே காலத்தில் விளைந்தாலும், வருடம் பூராவுமே நிரந்து செலவாகிவரக் கூடுமாதலால், பிரியம் வரும் சமயம் பார்த்து விற்றால்தான் நல்ல இலாபம் அடைய முடியும். சங்கத்தின் மூலமாகத்தான் விற்பதென்ற கண்டிப்பான வரையறையுமிருக்கவேண்டும். அப்படி விற்கத்தவறினால், நிர்த்தாட்சண்ணியமாகவும் கடுமையாகவும் அபராதமும் வசூலிக்கப்படவேண்டும். இப்படியான குறைந்த அளவு சாதகங்கள் கூட அமையாதென்றால், கடன் விற்பனைச் சங்கமிருந்தாலும் நமக்குப் பயன் படாது.

---

6. கல்வி:

ஆரம்பப்பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள்

(சாரம்) VIII

சரித்திரம்

அ. நோக்கங்களும் முறைகளும்

முற்காலங்களிலே ஆண்களும் பெண்களும் செய்துள்ள அரும் செயல்களெல்லாம் குழந்தைகளின் இயற்கை அறிவையும் உணர்ச்சியையும் தூண்டும். சுதந்தரம், கொடுங்கோன்மை, அரசாங்கம், குடியாட்சி இவற்றைப் பற்றிய கருத்துக்களை, சம்பவங்களையொட்டியே விளக்கி வரவேண்டும்; அவற்றைச் சும்மா புகுத்துவது கூடாது. தற்காலத்தைப் பழித்து, பழமையை அளவுக்குமிஞ்சித்தூக்கிப் பேசுவதுங் கூடாது. தற்கால நிலைமை பழமையிலிருந்து எப்படியெப்படி வளர்ந்ததென்பதை

மாணவர்கள் தெரிந்து கொள்வதற்கும் உதவ வேண்டும். குழந்தைகள் பழமையைத் தங்கள் மனதில் பதித்தும் தங்களுடைய படிப்பு முடிந்த பின், தாங்கள் புத்திசாலித்தனமாகவும் உபகார சிந்தையுடனும் திரும்ப வாழ்வதற்கு அது அவர்களுக்குதவக்கூடிய வகையில், பாடத்திட்டக் குறிப்பைக் கையாளவேண்டும்.

மூன்றுவது வகுப்பில் படிக்கும் குழந்தை முன்னொரு காலத்தில் என்ற கதையிலிருந்து அறிவை முறையாகச் செலுத்தும் கதைக்குத் தயாராகக் கூடுமென்று கருதப்படுகிறது. அந்த வயதில் தன் நாட்டுக் கற்பிதக் கதைகளேயும், கட்டுக் கதைகளேயும், ஆதிகால மனிதர்களேயும் தெரியக் கூடியதான நிலைமையை யடைந்திருக்கிறதாகக் கொள்ளலாம். அந்த வயதில் அந்தந்த ஊர்ச் சரித்திரம் முக்கியமென்பதை நாம் நம் மனதிலிருத்தவேண்டும். குழந்தையின் சுற்றுப்புறத்தை அது உற்று நோக்கி அதனைப்பற்றிய உண்மை யறிவு அதற்குத் தோன்றும்படியாகவும் செய்து வைக்கவேண்டும்.

குழந்தையின் மனதில் நிரந்தரமாகப் பதியும்படியாக அந்தந்தப் பிரதேசத்தில் மிகுந்த வீறுடனும் அக்கறை கொடுக்கக்கூடிய காரியங்கள் தென்னிந்தியச் சரித்திரத்தில் ஏராளமாக இருக்கின்றன. அவற்றையே பாடத்துக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

சரித்திரத்தைச் சரியாகத் தெரிவதற்குக் காலக்கிரமத்தை யனுசரித்து அழுத்திப் போகவேண்டியது சரியென்றுலும், 6, 7, 8 வது வகுப்புச் சரித்திர பாடத்தில் பெரும் பொருள்களே (in broad phases) எடுத்தே சொல்லி வைக்கவேண்டும்.

உயர்தர ஆரம்ப மாணவன் கொஞ்சம் விசாலமாகத் தெரிந்துகொள்ளவுங் கூடும். பெரிய இயக்கங்களேப் பற்றிப் படித்துத் தெரிந்துகொள்ளவும் திறமையுண்டு. ஒவ்வொரு காரியமும் பருவத்திற்குப் பருவம் காலத்திற்குக் காலம் எப்படியாக விருத்தியாகி வந்திருக்கக் கூடுமென்பதைக் கவனிக்கவுங் கூடும். ஒவ்வொரு சம்பவங்களும் மொத்தப் பார்வையில் எப்படியெப்படித் தோன்றுகிறதென்ற தாரதம்மியத்தையும் ஒரு வகையாகக் கூடியவரை சுமாராகத் தெரியக்கூடிய நிலைமையிலுமிருக்கக்கூடும். ஆகையால், அந்தப் பருவத்தில் ஆசிரியர் காலக்கிரம முறைக்கே கட்டுப்பட்டிருக்கவேண்டு மென்பதில்லை. அவர் அரசர்களுடைய காலக்கிரமப் பட்டியின் முக்கியத்தையேனும் அத்தகைய சம்பவப் பட்டியின் முக்யத்தையேனும் வற்புறுத்திக் காலங்கழிக்க வேண்டியதில்லை. அரசர்களிருக்கிறுர்கள் சம்பவங்களிருக்கிறதென்றுல் சம்பந்தப்பட்ட உண்மைகளே அவர்களேயும் அவற்றையும் ஒட்டி விவரிப்பதற்கிருப்பதாகவே கொள்ள வேண்டும். மனிதர்களேயும் சம்பவங்களேயும் பற்றித் தங்கள் கருத்துக்களே வெளியிடவும் பெரும் பொருள்களேப் பற்றிப் பேசித் தெளியவும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் தர வேண்டும். சரித்திரப் போக்கிலே தோன்றும் சிக்கல்களே உருப்படுத்தித் தெளிவதற்கு மாணவர்களுக்குத் தன்னேக்க முறை (project method) சாலவும் பொருந்தும். பாடத்திட்டக் குறிப்பில் கண்டுள்ள ஒவ்வொரு பெரும் பொருளும நுட்பமாக விரிக்கப்பட வேண்டியதில்லே யென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு காலத்திலும் உள்ள முக்கியக் குறிப்புக்கள் சங்கிலித் தொடரான சம்பவங்கள் இவற்றை மட்டும் மற்றவற்றினின்றும் பிரித்தெடுத்துக் கொண்டு எப்படி அந்தச் சங்கிலித்தொடர் சம்பவங்கள் சனங்களின் வாழ்க்கையில் பல வேறு வகையாகப் பதிந்தன வென்றும் பெரிய தேசிய அபிவிருத்திக்கு வழியாயிற்றென்றும் காட்ட வேண்டும்.

ஆரம்பத்தில் சரித்திரப் பாடத்தை ஒரு முகப்படுத்தியும் பின்னுல் பல பல பகுதிகளாக விரித்தும் நடத்தவேண்டும்.

எட்டாண்டுகளாகப் படித்து முடிக்கும் மாணவன் தற்காலம் நடைபெறும் உலக சம்பவங்களே ஒருவாறு அறிவதற்குத் தகுதியாக,

அந்தப் படிப்பின் முடிவில், எட்டாம் வகுப்பில் உலக சரித்திரத்தைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்திருப்பது நல்லதென்று கருதப்படுகிறது. என்றாலும், ஒரு சாதாரண ஆரம்பப் பள்ளியில் கிடைக்கக்கூடிய நேரம் வெகு சுருக்கமாக இருக்கக் கூடுமாதலால், பள்ளிக்கூடங்களின் பிரியம்போல் சில சில பெரும் பொருள்களை மட்டும் இந்தத் தலைப்பின்கீழ் எடுத்துக்கொள்ளும்படியாகச் சொல்லப்படுகிறது. மற்றப் பிரிய பாடங்களுக்குப் பதிலாக இதனை நடத்த விரும்புகிறவர்களுடைய சௌகரியத்திற்காக ஒரு பாடத்திட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஆ. அநுபவவேலை

கோவில்கள் கோட்டைகள் இடிந்து தகர்ந்திருக்கும் முற்காலக் கட்டடங்கள், உருவச் சிலைகள், குகைகள் முதலியவற்றின் நுட்பங்களைத் தேடிக் காண்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் மூழ்குபவராகும்படி மாணவர்களை எத்துணை செய்யக்கூடுமோ அத்துணையும் செய்து தீரவேண்டும். தாங்கள் நடந்து செல்லும் இடங்களில் வாழ்ந்த பெரியார்கள் ஆண் பெண் இருதரத்தாருடைய வாழ்க்கையையும் அவர்கள் செய்திருக்கும் அரும்பெரும் செயல்களையும் பற்றிப் பேசுவதால் அவர்களுக்குப் பழமையில் என்றும் குறையாத தீவிர உணர்ச்சியும் உண்மையான நாட்டுப் பற்றும் உண்டாகும்.

வாய்மொழியாக விவரித்தபின், அதனையனுசரித்து அவைபோன்ற பழைய காலக் கருவிகள் கரணங்கள் ஆயுதங்கள் மாதிரிகளும் செய்யச் சொல்ல வேண்டும். கோவில்கள் மசூதிகள் மற்றும் எவரும் பார்க்கவிரும்பக் கூடிய கட்டடங்கள் மனிதர்களின் படங்களைச் சேகரித்தலும் நடித்தலும் இவை போன்றனவும் வாய்மொழி விவரிப்பின் பின் தொடர்ந்து செய்து முடிக்க வேண்டும். அப்படிப் படிப்பிற்காக எடுத்துக்கொள்கிற அரும்பெரும் மனிதர்களும் அந்தப் பள்ளிக்கூடப் பிரதேசத்திற்கு முக்யமாகப் பொருந்தியிருக்கவேண்டும்.

ஐந்தாவது வகுப்புப் பிள்ளைகளை வயது வாரியாகப் பிரித்துப் பார்த்ததில் 11-12 வயதுப் பிள்ளைகளே அதிகமாக இருக்கின்றனர். ஆகையால், அந்த வகுப்பில் பாடங்களைத் தனித்தனி சம்பவங்களாக எடுத்துக்கொள்ளாமல் ஆதிகாலமிருந்து தொடர்ச்சியாகவும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்தியும் ஆனால் பொதுப்படையாகவும் சொல்லிவைக்க வேண்டும். இந்தியச் சரித்திரத்தின் முக்கிய சம்பவங்களும் அவற்றின் விருத்திகளும் சுருக்கமாக இருப்பினும் பூராவும் அவர்கள் தெரிந்திருக்க வேண்டியதவசியமாகும். காலச்சட்டங்கள் சரித்திரப் படங்கள் ஒட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதும் அப்பொழுது சாத்தியமாகும். படங்களாக ஒட்டிவைக்கும் புத்தகங்கள், உல்லாசப் பிரயாணங்களில் கவனித்துக் குறித்த குறிப்புக்கள், சித்திரங்கள் இவற்றின் முக்கியத்தை அழுத்தமாகவும் சொல்லிவைக்க வேண்டும். சரித்திர நாடகங்களை நடிக்கவும் முக்கிய சரித்திர சம்பவங்களைச் செய்தித்தாள்களிலிருந்து வெட்டி அறிவிப்புப் பலகைகளில் (Notice Board) ஒட்டி வரவும் இவை போன்ற காரியங்கள் செய்து வரவும் உற்சாகப் படுத்தவேண்டும். ஒரு சரித்திரப் பொருட்காட்சிச்சாலை இருப்பதும் நல்லது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் அவசியம் நல்ல சரித்திரப் புத்தகங்கள் பல இருக்க வேண்டும்.

இ. உதவிகளும் கரணங்களும்

மேல் இரண்டு தலைப்பின் கீழும் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றோடு சாத்தியமானால், முற்கால நாணயங்களையும் சேகரித்துக்கொள்ளலாம்.

(தொடரும்)

மாணவப் பருவமே மனிதனை உயர்த்துவது; ஆதலால் அதனை மதியாமல் திரியாதே.

மூல வியாதி

ஆசனத் துவாரத்துக்கு வெளியிலும் உள்ளும் நாளங்கள் (Veins) வீங்கிச் சுருண்டு போவதற்குத்தான் மூலம் என்று பெயர். வெளியிலே உள்ள வீக்கத்திற்குத் தோல் மூடியிருக்கும்; உள் வீக்கத்திற்குச் சவ்வு மூடியிருக்கும். ஒன்றுக்குப் "புறமூலம்" என்றும் மற்றதற்கு "உள் மூலம்" என்றும் பெயர். இந்த இரண்டு வகை மூலங்களும் ஒரே ஆளுக்கு இருப்பதுமுண்டு. ஆசனத் துவாரத்தில் தோலுக் கடியிலுள்ள நாளங்களில் ஏதாவது தொற்றுப் பிடிக்குமானால், பிறகு புற மூலம் உண்டாவது இலேசு. அந்தத் தொற்று, நாளங்களைக் கெடுத்து வீங்கச் செய்யும். சிலருக்குக் காலிலே நாளங்கள் தடித்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அந்த மாதிரிதான் இதுவும். வீங்கின நாளங்கள் தமக்கு மேலே இருக்கிற தோலைத் தடிக்கச் செய்யும். இப்படி உண்டாவது புற மூலம். உள் மூலமும் இப்படி வீக்கத்தால் உண்டாவதுதான். ஆனால் இந்த வீக்கம் ஆசனத் துவாரத்திலுள்ள சளிச் சவ்வுக்குக் கீழே யிருக்கும். அதிலே இரத்தம் குட்டை குட்டையாய்க் கட்டி நிற்கும். உள் வீக்கமும் சில சமையங்களில் வெளியில் தள்ளிக்கொண்டு வருவதுண்டு. முக்கியமாக, மலங் கழிக்க முக்குகிற பொழுது, மிகுந்த அசௌகரியமும் வலியும் உண்டாகும்.

(மூல வியாதிக்குக் காரணம் அநேகமாய் மலச் சிக்கல்தான்; ஆனால், அதற்கு மற்ற காரணங்களும் உண்டு. எந்நேரமும் உட்கார்ந்த படியே வேலை செய்வோருக்கு ஆசனத்தின் அருகிலுள்ள இரத்த நாடிகள் விரிவடைவதாலும் இவ் வியாதி உண்டாகக்கூடும். மலங்கழிய எண்ணமுண்டாகும்பொழுது அதனைக் கவனியாமலிருக்கிறவர்களும் நாட்சென்று இவ் வியாதியால் பீடிக்கப்படுகிறதுண்டு.

நல்வழி.

மூல வியாதி அநேகமாக நாற்பத்தைந்தாம் வயதுக்குப் பிறகே வரும். என்றாலும், அதற்கு இன்ன வயதுதான் என்று ஒரு திட்டமில்லை. எந்த வயதிலும் வரும். பச்சைக் குழந்தைகளுக்குக்கூட வந்திருக்கிறதென்றால் பாருங்களேன்!

ஆசனத் துவாரத்திலிருந்து கட்டியாய்த் தள்ளிக்கொண்டு வரும்; இரத்தம் கொட்டும்; கடுப்பு இருக்கும். ஒரு ஆளுக்கு ஒரு குணமும் இன்னொரு ஆளுக்கு இன்னொரு குணமும், சிலருக்கு எல்லாக் குணங்களுமே இருக்கலாம். வியாதி ஆரம்பித்த வுடனேயே இந்த மாதிரிக் குணங்களெல்லாம் தெரியுமென்று எண்ணப்படாது. வெகு நாளைக்கு ஒன்றுமே தெரியாமலிருக்கலாம். வியாதி உள்ளுக்கு இருந்துகொண்டிருக்கும். வெளிக்குக் காட்டாது. பிறகு அதோடு வேறெதாவது உபத்திரவம் வந்து சேர்ந்துகொள்ளுகிறபொழுது தான் வெளிக்குத் தெரியும். ஒரு ஆளுக்கு வியாதி வெகு நாளாக இருந்திருக்கும்; ஆனால், கடுப்பிருந்திருக்காது. திடீரென ஒரு நாள் ஆசனத் துவாரத்திலுள்ள சளிச் சவ்விலே ஒரு கிழிவு விழும்; அன்றைக்குத்தான் முதன் முதலாகக் கடுப்பு உண்டாகும். அன்றைக்குத் தான் ஐயாவுக்குச் சந்தேகம் உண்டாகும், தமக்கு மூல வியாதி இருந்தாலும் இருக்குமோ வென்று, நாளச் சுருள்களிலுள்ள இரத்தம் கட்டியாகிப் போனாலும் கடுப்பு இருக்கும்; இரத்தம் கட்டியாவது, அந்தப் பிரதேசத்திலுள்ள கொதிப்பினால். இவ்வாறு, உள்ளுக்கு இருக்கிற மூல வியாதி வெகு நாளைக்குப் பிறகு கூட வெளிக்குத் தெரிவது, அநேகமாக அதனால் ஏற்படும் சிக்கல் அல்லது கிளை நோய்களினாலேயே.

நீங்கள் வைத்தியரிடத்தில் உங்களுக்கு மூல வியாதி இருக்கிறதென்று சொன்னால், அதனை அவர் அப்படியே நம்பிவிட மாட்டார். அவர் முதலாவது உங்களைச் சோதித்துப் பார்ப்பார். பின்னரும் ஒரு முறை சோதிப் பார்.

சோதித்துப் பார்த்து, உங்களுக்கிருப்பது மூல வியாதிதான் என்று திட்டமாகத் தெரிந்தால், அதினுடைய தன்மைக்குத் தக்கபடி, நீங்கள் மருந்தை உட்செலுத்திக் கொள்ள வேண்டும். அல்லது அறுவை செய்துகொள்ள வேண்டும். அவர் சொற்படி செய்யுங்கள். சில வகை மூலத்துக்கு மருந்தை உட்செலுத்துதலும் சிலவற்றிற்கு அறுவையுமே நல்லது. ஆனால், பொதுவாக அறுவையே மேல். அதற்குப் பயப்படாதேயுங்கள். இக்காலத்திலே அறுவை செய்கிற முறைகள் எவ்வளவோ அபிவிருத்தியடைந்திருக்கின்றன.

நல்வழி.

(இலாய்மன் பாற்சுண்ணத்தை (calcium lactate) யேனும் சிறு நாகப்பூத் (Naga-pushpa Churnam) தூளையேனும் வெண்ணெய்யில் குழப்பி உட்கொண்டு வருவதாலும் Hadensa பிரயோகத்தாலும் ஈரவெங்காயம் துவரம் கருணைக் கிழங்கு மசியல் உழுத்தம் பருப்பு முதலியவற்றை யுண்டு வருவதாலும் தற்காலிக குணங் காணலாம். ப-ர்.)

ஆ. நாட்டுவைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள்

I. இஞ்சி

இஞ்சியின் குணமுமேதென் றியல்புட னுரைக்கக்கேளீர்
அஞ்சிடுஞ் சன்னி யெல்லா மகன்றிடும் பித்த தோடம்
நெஞ்சினிலிருமற்கோழைநெகிழ்ந்திடும்கபங்கள்தன்னை
மிஞ்சினி வருமோ வென்று விளம்பிடும் வேத நூலே.
(குணபாடம்.) எடு.

சன்னி யெல்லாம் அஞ்சிடும், பித்த தோடம் அகன்றிடும். நெஞ்சினில் இருமல் கோழை நெகிழ்ந்திடும். கபங்கள் வரா.

II. 1. "இளம் பிராயத்திலே சிகரெட் புகைப்பதான தீய பழக்கத்தைக் கற்றுக்கொள்ளுவதால் தேகத்திற்கு நேரிடக்கூடிய நிரந்தரமான மோசங்களையும் எடுத்துச் சொல்லி அவ்வழக்கத்தையும் நிறுத்தக் கலாசாலை அதிகாரிகள் பிரயாசைப் படவேண்டும். அவர்கள் மாணவர்களைச் சிகரெட் பிடிப்பதினின்றும் தடுக்கவேண்டும். மாணவர்கள் இச் சட்டத்தை மீறிப் பள்ளிக்கூடத்திலாகிலும் வெளியிலாகிலும் சிகரெட் புகைப்பார்களானால், அதை ஒரு பெரிய குற்றமாகப் பாவிக்கவேண்டும். புகை குடித்தல் அவர்களுடைய வளர்ச்சிக்கு ஊறு செய்வது என்று அவர்களை எச்சரித்தாக வேண்டும்.

J. H. Jenkin's circular.

2. மருந்துக்கென்று அபின் தின்ன ஆரம்பித்து, தங்கள் காலமெல்லாம் அதற்கு அடிமையாக இருப்பவர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. அபின் ஒரு சிறந்த வலிகொல்லியாக இருக்கலாம்; ஆனால் அதன் பின் விளைவுகள் பயங்கரமானவை. வைத்தியர்கள் தாங்கள் சிகிச்சை செய்வது மனிதர்களுக்கு, நோய்களுக்கல்ல என்பதை ஒரு பொழுதும் மறந்துவிடக்கூடாது. ஒரு மனிதனுடைய நெற்றியின்மேல் உட்கார்ந்திருக்கும் ஒரு கொசுவை ஒரு தடியால் ஒரே அடியாக அடித்துக் கொன்று விடுவது நிரம்ப இலேசுதான்; ஆனால் அந்த அடியிலே அந்த மனிதனும் ஒரு வேளை செத்துப் போவான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அபின் தின்னுவதினால் விளையும் கேடுகள்:—

1. அபின் சீரணக் கோளாறுகளை உண்டாக்குகிறது.
2. மலச் சிக்கலை அதிகரிக்கிறது.
3. சுவாசத்தைக் கெடுக்கிறது.
4. புலன்களை மழுங்கச் செய்கிறது.
5. நரம்புகளைப் பலவீனப் படுத்துகிறது.
6. சுபாவ அன்பை அற்றுப்போகப் பண்ணுகிறது.
7. மக்களைத் தன்னலப் பிரியராக்குகிறது.

L. G. Mukerjee.

3. அபின் வியாதியின் சங்கடத்தைச் சொற்ப நேரம் மாத்திரம் இலகுவாக்குமே யன்றி, வியாதியின் காரணத்தை நீக்கமாட்டாது. அது மூளையை மடங்கடித்து, நரம்பிலிருந்து வரும் உணர்ச்சிகளை ஏற்கக் கூடாதபடி செய்துவிடுகிறது. மூளை இவ்வாறு செயல் கெட்டிருக்கையில், கட்புலனும் செவிப் புலனும் பாதிக்கப்படுகின்றன. இந்த மயக்கம் வரவரத் தெளிந்து, மனம் தன் பூர்வ நிலையை அடையும்பொழுது, மூளையுடன் சிறிது காலம் தொடர்பற்றுப் போயிருந்த நரம்புகளெல்லாம் முன் ஒரு நாளும் கொடுத்திராத அளவு உபத்திரவம் கொடுக்கின்றன.

Professor Fisher.

மதுபானத்தால் மூளைக்கு விளையுங்கேடு:—

4. மூளையின் தொழிலை மது எவ்வாறு கெடுக்கிறதென்பதை அறிய ஒரு வைத்தியன் கீழே காணும் பரீட்சையைச் செய்து பார்த்தான். தினம் மூன்று கரண்டி வீதம் பன்னிரண்டு நாள் மது குடித்து வந்தான். பன்னிரண்டாம் நாளில் அவன் புத்திக் கூர்மை மதுவை யுண்ணத் தொடங்குவதற்கு முன்னே இருந்ததைக் காட்டிலும் மிகவும் குறைந்திருந்தது. முன்னே அவனுக்கு ஒரு நிமிடநேரத்தில் நாற்பது வரிசைகளடங்கிய கூட்டலைக் கூட்ட முடிந்தது. ஆனால், பன்னிரண்டு நாட்களுக்கு மதுவைக் குடித்த பிறகு அவனால் இருபத்து நாலு வரிசைகளடங்கிய கூட்டலே மாத்திரம் கூட்ட முடிந்தது. முன்னே இரண்டு நிமிடத்தில் மனப்பாடம் செய்யக்கூடிய வசனத்தை இப்பொழுது பாடம் செய்ய ஆறு நிமிடம் வேண்டியதாயிருந்தது. பைத்தியம் பிடித்தலுக்கும் மதுபானம் முக்கிய காரணங்களில் ஒன்றாயிருப்பதால், அது மூளையைக் கெடுக்கிற தென்பதற்குத் தகுந்த சாட்சியமுமாகிறது.

ஓர் அமெரிக்க சங்கம்.

III. வெள்ளாட்டுப் பாலில் வியாதிக் கிருமிகள் இல்லை என்ற உண்மை ஒரு புற மிருக்க, அது தரும் சீரணசக்தியும் போற்றத்தக்கது. பசும்பாலில் அதிகமாக உள்ள சிறு கொழுப்பு மொக்குகளின் காரணமாய், அது தயிர்க் கட்டியாய் விடுகிறது; ஆனால் ஆட்டுப் பாலிலோ அது வெகு கொஞ்சமாயிருப்பதனால், அது பிள்ளைகளுக்கும், சீரணசக்தி அதிகமில்லாத பெரியோருக்கும் மிகவும் சிறந்ததாகும். ஆட்டுப் பால் கொஞ்ச நேரத்தில் சீரணமாகிவிடுகிறது; ஆனால் பசும் பால் அதிக நேரம் செல்லும்.

ஆட்டுப் பாலில் உள்ள சத்துப் பொருள் பசும்பாலில் உள்ளதைக் காட்டிலும் அதிகமானதென்பதும் தாய்ப்பாலில் உள்ளதைக் காட்டிலும் இருமடங்குக்கு அதிகமானதென்பதும் கவனிக்கத்தக்கது. ஆட்டுப் பாலில் தாய்ப் பாலில் உள்ள உலோகப் பொருட்களைவிட மூன்று பங்கும் பசும்பாலில் உள்ளதைவிட இரு பங்கும் இருக்கிறது. ஆடானது, தேக நிறை யளாவாய்க் கவனிக்கும்பொழுது, பசுவைவிட இரண்டு மடங்குப் பால் கறக்கிறது. தேக நிறைப்படி கவனிக்கும்பொழுது பசுவைவிட ஆடு அதிகம் தின்கிறது; ஆனால் ஆடு அதிக மலிவான உணவினால் திருப்தியடைந்து விடுகிறது; அதோடு, அதின் பாலில் பசும்பாலில் உள்ளதைவிடத் தண்ணீர் கொஞ்சமும் உணவுச் சத்து அதிகமும் இருக்கிறது.

ஆகவே குழந்தைகளுக்கும் பெரியோருக்கும் ஆட்டுப்பால் மிகவும் சிறந்ததென்றும் அதனை அதிகமாய்க் குடிக்க ஆரம்பிக்கவேண்டுமென்றும் தெளிவாகிறது.

நல்வழி.

8. கிராமவாசிகள் : விபசாயிகள்

பயிரிடுபவரின் வறுமை

CHOWDRY MUKHTAR SINGH

(சாரம்)X

கல்வி

முற்காலத்தில் கல்வி கற்பதற்குப் போதிய சௌகரியங்க ளிருந்ததில்லை யென்றும் அப்படிச் சௌகரியங்களமைத்துத் தரவேண்டியது தன் கடமையாக முற்கால அரசாங்கம் கருதியதில்லையென்றும் அப்படிப் பள்ளிகள், கல்லூரி

கள், பல்கலைக் கழகங்கள், முற்கால அரசாங்கம் நடத்தி வந்ததில்லை யென்றும் சொல்லப்படு கிறது. அவற்றை ஆட்சேபித்து நம் கருத்தை விளக்கிக்கொண்டிருக்க நமக்குப் பிரியமில்லை. ஆனால், ஒன்றுமட்டும் சொல்லுவோம். கற்பதற்கு முற்காலத்திலிருந்த வசதிகளும் இப்பொழுதில்லை. எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் சதமானம் இப்பொழுது முன்னிலும் அதிகமாகவே இருக்கிறது. முற்காலத்தில் சமயக் கல்வியை விரும்பிய மாதிரி சாத்ரீகக் கல்வியை விரும்பியதில்லையென்று சொல்லலாம். அதனால், கல்வியே கவனிக்கப் படாதிருந்துவந்ததென்று சொல்லிவிட முடியாது. அந்தக் காலத்திலிருந்த கல்வியின் மாதிரி வேறுதான்; ஆனால், அந்தக் கல்வியின் பயன் இப்போதைய கல்வியின் பயனுக்கும் குறைந்திருக்கவில்லை.

கிராமந் தவறாமல் ஆசிரியர்களிருந்து வந்தனர். அவர்களுக்கு இறையிலி நிலங்கள் விடப்பட்டிருந்தன. அல்லது அறுவடைக் காலத்தில் போதிய அளவு தானியம் கொடுக்கப்பட்டு வந்தது. பெண்களின் கல்வியும் கவனிக்கப்படாமலிருக்கவில்லை.

முற்காலத்தில் கல்வி கற்பிப்பதற்காகப் பணம் வாங்குவது ஒரு பாவமாகக் கருதப்பட்டு வந்தது. புதிய அரசாங்கம் வரவும் கல்விக்காக விடப்பட்டிருந்த இறையிலி நிலங்கள் அநேக இடங்களில் கைப்பற்றப்பட்டன. அவர்களுக்கு வேறு வரவுமில்லாத நிலைமையில் தங்களுடைய கல்வி கற்பிக்கும் தொழிலையும் ஆசிரியர்கள் கைவிட நேர்ந்தது.

முகம்மதிய அரசாங்கத்திலும் இந்துக்கள் உயர்ந்த பதவிகள் வகித்து வந்தனர். அங்கில அரசாங்கம் தனது இரகசியத்தை நம் நாட்டார் எவரும் அறிய விரும்பாததால், நம்மில் எவருக்கும் உயர்ந்த பதவி கிடைப்பதற்கு மில்லை; ஆகையால், உத்தியோகத்திற்காகப் படிப்பவருமில்லை யென்றாயிற்று. பின் அங்கிலம் கற்றவர்களுக்குத்தான் சிறு வேலைகள் என்று வந்ததில், அங்கிலம் கற்பதில் தாய் மொழியையும் அசட்டை செய்வதாயிற்று. அதனால், தாய் மொழிக்கும் விருத்தியில்லாது போயிற்று.

கிராம அதிகாரிகளும் சனங்களுடைய பிரதிநிதிகளாக இல்லாமல் அங்கில அரசாங்கப் பிரதிநிதிகளாயினர். கிராமப் பஞ்சாயத்துக்களும் வேலை செய்யாது நின்றன. இப்படியாகப் பழைய சம்பிரதாயங்களும் பழக்க வழக்கங்களும் மாற மாற, முற்காலக் கல்வியும் குறைந்து போயிற்று. (தொடரும்)

9. கதை: சரித்திரம்

பண்டிதர் வாசிங்டன் கார்வர்

(Dr. George Washington Carvar, Negro Scientist)

பண்டிதர் வாசிங்டன் கார்வர் என்பவர் அமெரிக்க ஐக்கிய மாகாணத்தின் (U. S. A.) தென் பகுதியிலிருக்கும் அலபாமா சில்லாவில் தசுகெகி என்னும் ஊரிலுள்ள விஞ்ஞான வித்பனராவர். இவர் வேதி சாத்திரத்திலும் (Chemistry) விபசாய சாத்திரத்திலும் (Agriculture) மிகக் கைதேர்ந்த நிபுணராவர். சாதாரணப் பொருள்களைக் கொண்டு வெவ்வேறு உபயோகமான சாமான்கள் செய்வதற்கு நவீன முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டு மென்பது இவருடைய கொள்கை. அப்படியே நம் நாட்டில் விளையும் நிலக்கடலை, (மணிலாக்கொட்டை, ground nut) போன்ற அமெரிக்கா தேசத்தில் விளையும் கடலையிலிருந்து (Pea-nut) பலவேறு உபயோகமான பொருள்கள் மூந்நூறுவரை செய்யும் முறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார். அக்கடலையிலிருந்து பாற்கட்டி, கற்கண்டு, எண்ணெய், காலை ஆகாரத்திற்கு உதவும் பல ஆகாராதிகள், சோப்பு, முகத்திற்குப் பூசும் வாசனைப்

பொடி, அச்சடிக்க உபயோகிக்கும் மை, இன்னும் பல சாயங்கள் முதலிய பொருள்களைச் செய்யக் கூடுமென்றும் காட்டியிருக்கிறார். இவற்றைப் போலவே அமெரிக்காவில் விளையும் சருக்கரை வள்ளிக் கிழங்கிலிருந்து (Sweet potato) காற்சோடுகளுக்குப் பளபளப்புக் கொடுக்கும் மை, எழுதும் மை, சாயங்கள், காடி முதலிய உபயோகமான சாமான்கள் நூறுவரை செய்யும் வழிகளையுங் கண்டு பிடித்திருக்கிறார். மரக்கட்டைகளை அறுக்கும் பொழுது கிடைக்கும் அரம்பத்தூளிலிருந்து ஒருவிதச் செயற்கைச் சலவைக்கல்லும் மாட்டுச் சாணத்திலிருந்து வர்ணங்கள் முதலியவற்றும் செய்த வேதி விற்பன்னரும் இவர்தான். இவரை வேதி மந்திரவாதி யென்றுஞ் சொல்லுவதுண்டு.

பண்டிதர் கார்வர் நீகிரோ (Negro) என்று சொல்லப்படும் காட்டுமிராண்டி இனத்தைச் சேர்ந்தவர். இவருடைய பெற்றோர்கள் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் டையமண்ட் க்ரூவ் (Diamond Groave) என்ற ஊரில் வசித்த மோசே கார்வர் என்னும் பெயர் கொண்ட குடியானவரிடம் அடிமைகளாக இருந்தார்கள். தம் தாய் தந்தையர் யார் என்றுகூட அறியாதவர் நம் பண்டிதர். அவர் அடிமைகள் வசிக்கும் குடிசையில் பிறந்து ஆறு மாதக் குழந்தையாக இருக்கும்பொழுது தாயையும் பிள்ளையையும் கொள்ளைக்கூட்டத்தார் திருடிச் சென்றார்கள். கொள்ளைக்காரர் அக்குழந்தைக்கு வேண்டிய உணவு முதலியவற்றைக் கவனித்துக் கொடுக்காததால் குழந்தைக்குக் கக்குவான் இருமல் வந்து இறக்குந் தறுவாயிலிருந்தது. அப்பொழுது மோசே கார்வர் தம் ஆட்களை அனுப்பித் தேடி அக்குழந்தையைப் பெற்றுவரும்படி அனுப்பினார். கொள்ளைக்காரர்கள் அவர்களைப் பார்த்து ஒரு குதிரை கொடுத்தால் குழந்தையைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர்களும் அப்படியே ஒரு கிழட்டுக் குதிரையைக் கொள்ளைக்காரரிடம் கொடுத்து, குழந்தையை வாங்கிக் கொண்டு வந்தார்கள். கொள்ளைக்காரர்கள் அக்குழந்தையின் தாயை வேறு யாருக்கோ விற்றுவிட்டார்கள். ஆகவே, பண்டிதர் கார்வரின் தாயைப்பற்றி வேறொன்றும் தெரியவில்லை.

நோயுற்றிருந்த அக்குழந்தையை மோசே கார்வரும் அவருடைய மனைவியும் வளர்த்து அதற்குச் சார்சு வாசிங்டன் என்று பெயரிட்டார்கள். தகுந்த வயதடைந்த பிறகும் நம் பண்டிதர் அக்குடியானவர் வீட்டிலேயே சில்லறை வேலைகளைச் செய்து வந்தார். அவருக்கோ படிக்கவேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. அக்குடியானவரும் அவரைப் படிக்கவைக்க வேண்டுமென்று நினைத்தார். ஆனால், அக்குடியானவர் அவரைப் பள்ளிக்கூடத்திற்குப் போகமட்டும் உத்தரவு கொடுத்தாரே யொழியச் சம்பளம் புத்தகம் முதலியவற்றிற்காகப் பணத்தைக் கொடுத்தாரில்லை. கையில் தம்படிகூட இல்லாமல் நம் பண்டிதர் எட்டு மைலுக்கப்பாலிருந்த ஊரிலிருந்த பள்ளிக்கூடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அங்கு அவர் பட்ட சங்கடத்திற்கு அளவேயில்லை. திண்ணைகளிலும், குதிரை இலாயங்களிலும் படுத்துறங்கி ஒழிந்த நேரங்களில் கூலி வேலை செய்து தன் ஆகாரத்திற்கும் பள்ளிக்கூடச் சம்பளத்திற்கும் வேண்டியதைத் தாமே சம்பாதித்து உயர்தரப் பாடசாலைப் படிப்பை முடித்தார்.

கல்லூரிக்குப் போய் இன்னும் மேல் படிப்புப் படிக்க வேண்டுமென்று அவருக்குப் பிரியமிருந்ததால் ஐயோவா மாகாணத்திலுள்ள ஒரு கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்பினார். அங்குச் சேர்த்துக் கொள்ளலாமெனப் பதில் வந்தது. ஆனால் அவர் நேரில் போகவும் அவர் "நீகிரோ" வாக இருந்தமையால் அவரைச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். அவர் அதனால் அதைரியப்பட்டு விடாமல் சிறு கூலி வேலை செய்து பின்பு ஒரு சலவைத் தொழிற்சாலை துவக்கிக் கொஞ்சம் பணம் சேர்த்து மறு ஆண்டில் ஐயோவா மாகாணத்தில் இண்டியனோலா என்னும் ஊரிலுள்ள சிம்ப்சன் கல்லூரி

(Simpson College, Indianola) யில் பணம் கட்டிச் சேர்ந்தார். சேருவதற்கான பிரவேசக் கட்டணம் கல்லூரிக்குக் கட்டிய பிறகு அவரிடத்தில் பத்து சதம்தான் மீதி யிருந்தது. தம் செலவுக்கு வேண்டிய பணத்தைத் தாமே சிற்சில கூலி வேலை செய்து சம்பாதித்து வெகு சங்கடப்பட்டு 1894-ம் ஆண்டில் விபசாய சாத்திரப் பட்டப் பரீட்சை தேறினார். அவருடைய திறமையைக் கண் கூடாகக் கண்ட கல்லூரி அதிகாரிகள் அவரை அக் கல்லூரியிலேயே வேலைக்கு நியமித்தார்கள். அவர் அங்கு அதிக நாள் தங்கவில்லை.

நம் பண்டிதர் ஐயோவாவிலிருக்கும் பொழுது புக்கர் வாஸிங்டன் என்பவர் அவரைத் தசுகெகி ஆராய்ச்சி நிலயத்திற்கு வரும்படி அழைத்தார். வெகு மகிழ்ச்சியோடு அவர் அப் பதவியை ஏற்றுக்கொண்டார். ஏனெனில் தசுகெகி இருக்கும் ஐக்கிய மாகாணத்தின் தென் பாகத்தில்தான் நீகிரோவர்கள் அதிகமாக வசித்தார்கள். அங்கு போய்த் தம் இனத்தார் நன்மைக்காகத் தம்மாலான தொண்டு புரிய வேண்டுமென்று நம் பண்டிதர் பெரும் ஆவல் கொண்டிருந்தார். அப் பிரதேசத்திலிருந்தவர்கள் அறியாமையினால் திரும்பத் திரும்ப நிலத்தில் பருத்தியே போட்டுச் சாகுபடி செய்தமையால் நிலம் "அலுத்த நிலமாகி" (tired soil) சரியானபடி பலனளிக்காமலிருந்தது. நம் பண்டிதர் பிரசங்கங்களின் மூலமாகவும் அச்சுப் பிரதிகள் மூலமாகவும் நிலத்தில் ஒரே பயிரை விதைக்காமல் மாற்றி மாற்றிப் பருத்தி, நிலக்கடலை, சருக்கரை வள்ளிக்கிழங்கு போன்றவையைச் சாகுபடி செய்தால் நல்ல பலன் கிடைக்குமென்று காட்டினார். அப்படியே விபசாயிகள் நிலக்கடலையையும் சருக்கரை வள்ளிக் கிழங்கையும் பயிரிட்டார்கள். ஏராளமாகக் கடலையும், கிழங்கும் விளைந்தது. ஆனால், அவற்றைச் சரியானபடி உபயோகிக்கத் தெரியாததால், அவற்றை வாங்கவும் ஆளில்லாது போய்விட்டது. தற்போதுகூட, நம் நாட்டில் சருக்கரை வள்ளிக் கிழங்கையும், கடலையையும் வேகவைத்துத் தின்பதைத் தவிர வேறு வழியில் உபயோகிக்கத் தெரியாதல்லவா? முந்திய ஆண்டுகளில் நம் நாட்டில் விளைந்த கடலை ஏராளமாக வெளித் தேசங்களுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது. ஆனால், இவ்வாண்டில் சண்டையால் ஏற்றுமதி நின்றுவிட்டதால் விளைந்த கடலையை வாங்க ஆளில்லாமல் விவசாயிகள் நட்டமடைந்திருப்பது நம்மெல்லாருக்குந் தெரியும். இக் கடலையிலிருந்து நெய், சோப்பு, பிசுகத்து முதலிய பொருள்கள் செய்வதற்குத் தொழிற்சாலைகள் துவக்க நம் நாட்டில் ஏற்பாடாகி வருவதாகத் தெரிகிறது.

அமெரிக்காவில் கடலையும் கிழங்கும் அதிகமாக விளைந்து வாங்க ஆளில்லாமல் அவை அழுகி வீணாகிக்கொண்டிருப்பதைப் பார்த்து அந்த நட்டம் தம்மால் ஏற்பட்டதென்று நம் பண்டிதர் அதிக விசனமடைந்தார். உடனே அவர் கடலையிலிருந்தும், சருக்கரை வள்ளிக் கிழங்கிலிருந்தும் உபயோகமான பொருள்களைச் செய்யும் முறைகளைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சிகளைத் துவக்கினார். இராப் பகலாகச் சிரமப்பட்டு இவ் விரு பொருள்களினுமிருந்து மேலே சொன்ன சாமான்களை யெல்லாம் செய்யும் முறைகளைக் கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்த புதிய முறைகளை இரகசியமாக வைத்துக்கொள்ளாமல், உலகத்தாரின் நன்மைக்காக அவை உபயோகப்படட்டுமென்று தாராள சிந்தையோடு பகிரங்கப்படுத்தினார். இப் புதிய முறைகளின் மூலம் உபயோகமான பொருள்களான சோப்பு, நெய், வாசனைப் பொடி, பிசுகத்து முதலியவற்றைக் கடலையிலிருந்தும் கிழங்கிலிருந்தும் செய்யப் புதிய தொழிற்சாலைகள் ஏற்பட்டு விளைந்த கடலை, கிழங்கெல்லாம் செலவாகி விபசாயிகள் சங்கடம் நிவர்த்தியானது.

நம் பண்டிதருடைய ஆராய்ச்சிகள் வெளிப்படவும் பலபேர் அவரை தசுகெகியிலிருந்து மற்ற ஊர்களுக்கு அழைத்தார்கள். பணத்தின் மேலோ அல்லது கியாதியின் மேலோ அவருக்குப் பிரீதி யிருந்திருந்தால் அவர் வெளியூருக்குப் போயிருப்பார். எலக்ட்ரிக் பல்ப், கிராமபோன் முதலியவற்றைக்

கண்டுபிடித்த பிரபல அமெரிக்க விஞ்ஞான விற்பனரான எடிசன் என்பவர்கூடத் தன்னுடன் வந்து ஆராய்ச்சி நடத்தும்படி நம் பண்டிதரை அழைத்தார். அப்பொழுது, நம் பண்டிதர் தான் தசுகெகியை விட்டுப்போவது கடவுளுக்குச் சித்தமில்லை போலிருக்கிறது என்று எழுதிவிட்டார். சிறு வயதில் பரம ஏழையாக வளர்ந்தவராக இருந்த போதிலும், சொத்தின் மேல் அவருக்குக் கிஞ்சிற்றேனும் பிரீதி கிடையாது. ஒரு முறை பிளாரிடா (Florida) மாகாணத்தில் கடலைப் பயிர் செய்பவர்களில் சிலர் தம் பயிர்களுக்கு ஏதோ நோய் வந்து பயிர் அழிந்து போவதை நம் பண்டிதருக்குத் தெரிவித்தார்கள். அவர் அச்செடிகளைச் சோதனைசெய்து, அந் நோய்க்குச் சிகிட்சை செய்யும் முறையைக் கண்டு பிடித்தார். அம்முறையைக் கையாடிப் பலனடைந்த அந்த உழவர்கள் தம் நன்றியைக் காட்ட நம் பண்டிதருக்கு நூறு தாலர் அனுப்பி, மாதா மாதம் அப்படியே அனுப்புவதாக எழுதியிருந்தார்கள். நம் பண்டிதரோ அந்த நூறு தாலர் நோட்டைத் திருப்பியனுப்பி விட்டார். கடவுள் தான் கடலைச் செடியை வளர்க்கிறார்; கடலைச் செடியை வளர்க்கக் கடவுள் யாதொரு கூலியும் வாங்குவதில்லை. அப்படியிருக்க, அச்செடிக்கு வந்த ஒரு நோயைக் குணப் படுத்தியதற்காகத் தாம் கூலி வாங்குவது சரியல்லவென்று எழுதியனுப்பினார். தசுகெகி ஆராய்ச்சி சாலையில் அவருக்குக் கிடைத்த சம்பளம் மிகச் சொற்பமே. அப் பணத்திலும் தமக்கு மிகவும் அவசியமானவற்றிற்கு மட்டும் செலவழித்து மீதப் பணத்தை நீகிரோப் பையன்களுக்கும் இன்னும் மற்ற ஏழை அமெரிக்கப் பையன்களுக்கும் படிப்பதற்காகக் கொடுத்துதவுவார். தம் ஆடையிலும் அதிகமாக அனாவசியச் செலவு செய்வதில்லை. ஒரு பழைய "அல்பாக்கா" சட்டையும் கறுப்புக் கால் சட்டையுந்தான் அவர் எப்பொழுதும் அணிந்துகொள்ளுவார். அவை கிழியக் கிழியத் தானே தைத்து அவற்றைச் செம்மை பண்ணி அணிந்துகொள்ளுவார்.

வேதி சாத்திரத்தில் அவருக்கிருக்கும் பாண்டித்தியத்தோடு சித்திரம் வரைவதிலும் அதிகத் திறமை வாய்ந்திருந்தார். அவர், படம் வரைய உபயோகிக்கும் வர்ணங்களெல்லாம் அவ்வூர்க் களிமண்ணிலிருந்து செய்யப்பட்டவை. அவர் வரையும் காகிதம் கடலைத் தோலிலிருந்து செய்யப்பட்டது. காட்டுப் பூக்களைப் போல் வரைவது அவருக்கு மிகப் பிரியம். அவரால் வரையப்பட்ட படங்கள், இலண்டன், பாரிசு போன்ற பெரிய பட்டினங்களில் கண்காட்சிச் சாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவருக்குச் சங்கீதப் பயிற்சியும் உண்டு. பியானோ வாசிப்பதில் திறமையுள்ளவர்.

ஒரு நாள் அவருடைய சிநேகிதர் ஒருவர் அவரைப் பார்த்து இவ்வளவு காரியங்களிலும் திறமையடைய எப்படி அவருக்கு முடிந்ததென்று கேட்டபொழுது தாம் தினம் விடியற் காலம் நாலு மணிக்கு எழுந்திருந்து காட்டிற்குப்போய்ப் பூக்களைப் பார்த்துக் கடவுளைப் பற்றித் தியானிக்கும்பொழுது பற்பல பொருள்களை உபயோகிக்கும் விதத்தைக் கடவுள் தம் மனதில் உற்பத்தியாகும்படி செய்கிறார் என்று சொன்னார். உடனே தம் வாய்க்குள்ளே, நம் பண்டிதர் "கிழட்டு ஏழை நீகிரோவான தம்மிடத்தில் கடவுள் மிக்கக் கருணையுள்ளவராக இருக்கிறார்" என்று சொல்லிக்கொண்டார். இவ்வளவு தேர்ச்சி பெற்ற விஞ்ஞான சாத்திரிக்கு மனிதனின் துர்ப்பலமும் கடவுளின் அளவில்லாத வல்லமையும் நன்கு விளங்குகிறது.

சத்திய போதினி. S. M. Antonisamy.

---

10. கைத் தொழில்: குடிசைத் தொழில்

பொருளாதார விருத்திக்கான சௌகரியங்களைப் பற்றிய குறிப்பு

L. B. Green, Director of Industries and Commerce, Madras.

(சாரம் VIII)

உரங்களும் பூச்சிகளை யொழிக்கும் மருந்துகளும்.

நம் சென்னை மாகாணம் உழவையே முக்கியத் தொழிலாகக்கொண்ட மாகாணமாகும். ஆகையால், நம் மாகாணத்தின் செழிப்பும் உழவின் விளைவையே வெகுவாகப் பொறுத்திருக்கிறது. உழவைத் தீவிரமாகச்

செய்வதற்குத் தண்ணீரும் வேண்டும், உரமும் வேண்டும். நம் மாகாணத்தில் தண்ணீர்ப் பாசனத்தைப் பெருக்க அதிக வேலை செய்யப் பட்டிருக்கிறது. உரங்களைச் சௌகரியப் படுத்தக் கொஞ்சமும் முயற்சி செய்யப்பட வில்லை யென்றே சொல்லவேண்டும். அதனால், நமக்கு உரங்கள் வெளி நாடுகளிலிருந்து இறக் குமதியாக வேண்டியதிருக்கின்றன. நம் இந் தியாவில் அதிலும் நம் மாகாணத்தில் செலவா கும் நவச்சிவயக்கந்தகையில் பேர்பாதி வரை வெளிகளிலிருந்து வருவதால், அத்தகைய முயற்சியை நம் மாகாணத்திலேயே ஆரம்பிக்க லாகும். 1938-39ம் ஆண்டில் நம் மாகாணம் இறக்குமதி செய்த உரங்களின் கிரையம் 51·65 இலட்ச ரூபாவாகும். நம் மாகாணத் திலும் மைசூரிலும் திருவாங்கூரிலும் கொச்சி யிலும் சேர்ந்து 35,000 தன் உரங்கள் செல வாகி யிருக்கின்றன. அவற்றில் 32,000 தன் நவச்சிவயக் கந்தகையாகும். 3,000 தன் கலப்பு உரங்களாகும். நம் நாடு ஆண்டுதோறும் 60 இலட்ச ரூபா பெறுமான 60,000 தன் நவச்சிவயக் கந்தகை பிறநாடுகளிலிருந்து இறக் குமதி செய்கிறது. அதில் பேர் பாதிவரை நம் தென்னிந்தியாவிலேயே செலவாகிறது. சென்ற ஐந்தாண்டுகளாக நம் நாட்டின் இறக்கு மதி 36,000 தன் வரை கூடியிருக்கிறது. நவச்சிவயக் கந்தகை செய்வதற்கு வேண்டிய பொருள்களும் நம் நாட்டில் கிடைப்பனவும் செய்யக்கூடியனவாகவு மிருக்கின்றன. பூச்சி களைக் கொல்லும் மருந்து செய்வதற்கு வேண் டிய பொருள்களும் நம் நாட்டில் கிடைக்கும்.

பழங்களைக் கேடாது பாதுகாத்தலும் அவற்றைக் குவளைகளில் அடைத்து வைத்தலும்.

நாம் முறப்பாக்களும் பழப்பாகுகளும் செய்யலாம். மற்றப்படிக்கும் பழங்களைப் பாதுகாக்க அவற்றைக் குவளைகளில் அடைத்து வைக்கலாம். இப்படியாக, அந்தத் தொழிலை நாம் வெகுவாக வளர்க்கலாம். உணவுத் தேவையை நாம் உத்தேசித்தாலும், அந்த முயற்சி விருத்தியடைய வேண்டியது அவசிய மாகும். அதனைச் சரியான வழியில் விருத்தி செய்தால், பொதுவாகப் பொருளாதார நிலை மையும் விருத்தியாகும். பழங்களைக் கெடாது பாதுகாப்பதற்கில்லாமல் பழங்களைப் பெருக்கு வதிலும் பயனில்லை. பழங்களைப் பாதுகாத் தலைக் குடிசைத் தொழிலாகவும் செய்யலாம். ஆலைத் தொழிலாகவும் செய்யலாம். மாம்பழங் களையும் அன்னாசிப் பழங்களையும் குவளைகளில் அடைத்துப்பாதுகாப்பதற்குப் பெசுவாடாவில் ஒரு தொழிற்சாலை யமைக்கப்பட்டிருக்கிறது. கர்நூல் சில்லாவிலுள்ள பன்னியம் மாம்பழம், ஆரஞ்சு, கொய்யா, விளாம்பழம் முதலியன வெகுவாக விளையும் முக்கியத்தலமாகும். இவை நிரம்பப் பழுக்கும் காலங்களில் சாதாரணமாகச் செலவழிக்க முடியாதவற்றைக் குவளைகளில் அடைத்துப் பாதுகாப்பதற்காக அரசாங்கக் கைத்தொழில் உதவிச் சட்டத்தின்படி பண உதவி கேட்கப்பட்டிருக்கிறது. இங்கே அத் தொழில் விருத்தியாகவுங்கூடும்.

மற்றும் சில கைத்தொழில்கள்.

நம் மாகாணத்தில் திருநெல்வேலி சில்லா விலும் கடப்பை சில்லாவிலும் காகிதம் செய் வதற்கான வசதிகளிருக்கின்றன. வார்னீசு களும் தைலங்களும் செய்வதற்குக் கொடுபட்ட சில்லாக்களிலும் (Ceded Districts) ஐதரா பாத்திலும் வேண்டிய வசதிகளிருக்கின்றன. கொடுபட்ட சில்லாக்களில் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய கற்றாழை நார்களை வைத்துச் சில தொழில்களும் செய்யலாம். கண்ணாடித் தொழிலைச் செய்வதற்கும் நம் மாகாணத்தில் பல சௌகரியங்கள் உண்டு.

11. செய்தித் திரட்டு :

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்

1. தஞ்சை மிராசுதார் சங்கம், மாயவரம் இப்போதைய நில வரி முறை குடியானவர் களுக்குப் பாதகமாக இருந்து வருவதால் அந் தப் பாதகங்கள் நீங்கும்படியாக இந்த

முறையே திருத்தப்பட வேண்டுமென்றும் அதற்குச் சூசனையாக இவ்வாண்டில் முன்னாண்டைக் காட்டிலும் (முன்னாண்டின் தீர்வைக் கழிவு 75 இலட்சம் ரூபா) 81 இலட்சம் ரூபா அதிகமாகத் தீர்வையைக் கழிக்க வேண்டுமென்றும் ஒரு குறிப்பு (Memorandum) அனுப்பியிருக்கிறது.

மிராசுதார்.

2. தீர்வை வசூல் சலுகைகள்.

1. தீர்வை பாக்கி அரசாங்க ஆண்டு முடிவிற்குமுன் செலுத்தப்படுமானால், அதற்காக முன் நேர்ந்திருக்கும் அறிவிப்புப் பிரசுரக் (Isthiyar) கட்டணங்களை அமில்தாரே மன்னித்துவிடலாம்.

2. நிலங்கள் ஏலத்திற்கு வந்து வேறு யாரும் கேட்பதற்கில்லாமல் அரசாங்கமே நிலத்தை யெடுத்திருந்து தீர்வைப் பாக்கியையும் செலவையும் கூடிய சீக்கிரமாகப் பாக்கிப் புள்ளி செலுத்தி விடுவதாயிருந்தால், வேறு அபராதம் ஏதேனும் வசூலிக்காமலே நிலங்களைத் திரும்பக் கொடுத்துவிடலாம்.

3. எந்த நிலங்களின் பேரில் தீர்வைப் பாக்கி ஏற்படுகிறதோ, அந்த நிலங்களை மட்டும்தான் தீர்வைப் பாக்கிக்காக அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

4. தீர்வைப் பாக்கிக்காக ஏலம் ஆன பின் சில சர்வே நிலங்களை மட்டும் திரும்பக் கொடுக்கவேணுமாய்க் கேட்டுக்கொண்டாலும் மற்றப் பாக்கிகளைச் செலுத்த வேண்டுமென்ற கட்டாயமில்லாமலே கேட்கப்படும் நிலங்களின் பாக்கியையும் செலவுகளையும் வசூலித்துக் கொண்டு அவற்றைத் திரும்பக் கொடுத்து விடலாம்.

5. தீர்வைப் பாக்கிக்காக ஏலமான நிலம் விற்கமுடியாது போனாலும், விற்று வந்த வரவு தீர்வைப் பாக்கிக்குக் காணாதிருந்தாலும் பாக்கியை வசூலிப்பதற்காகத் தீர்வை செலுத்த வேண்டியவர்களுடைய சங்கம சொத்துக்களின் பேரிலும் மற்றச் சொத்துக்களின் பேரிலும் நடபடிக்கை எடுத்துக்கொள்ளாமலே நிலவரிச் சட்டம் (Land Revenue Code) 35 வது விதியின்படி மன்னித்து விடலாம்.

6. தீர்வைப் பாக்கி எவ்வளவாக இருந்த போதிலும் நிலவரிச் சட்டம் 158 வது பகுதியின் (Section) படி அறிவிப்புக் கட்டணம் 4 அணுவாகவே வசூலிக்கவேண்டும்.

7. தீர்வையாகப் பெருந்தொகை செலுத்தவேண்டியவர்களுக்குப் பதிலாகக் கமிசனர் தாராளமாக வாயிதாவும் கொடுக்கலாம்.

8. நில விருத்திக் கடனின் சாதாரண வட்டி 4 சதமாகவும் அபராத வட்டி $6\frac{1}{2}$ சதமாகவுமிருந்து வரும். அதே மாதிரியாகத் தக்காவிக் கடனுக்கும் சாதாரண வட்டி 4 சதமாகவும் அபராத வட்டி $6\frac{1}{2}$ சதமாகவுமிருக்கும்.

குறிப்பு:—இந்தச் சலுகைகள் 1941-42 ம் ஆண்டு முடிய அமுலிலிருந்து வரும்.

Mysore Information.

3. இப்போதைய நிலவரி விதிகளின்படி எங்கும் விளைவுகுறையும்பொழுது எதாமொரு பிரதேசத்தில் சராசரி விளைவு அரை மேனிக்கும் குறைவாக இருந்தால், புன்செய்த் தீர்வையும் வசா செய்யப்படுகிறது. இந்த விதியை அனுசரிப்பதற்குக் கிணற்றிறைவையால் விளைவாகும் நிலங்களின் மேனியைக் கணக்கிலெடுத்துக்கொள்வதில்லை. இதுவரை அப்படி நிலங்களுக்குத் தீர்வைக் கழிவும் தருவதில்லை. அரசாங்கம் இவற்றையெல்லாம் கவனித்து இறைவைப் புன்செய்களுக்கும் தீர்வைக் கழிவு தர வேண்டுமென்பதான அபிப்பிராயத்திற்கு வந்திருக்கிறது. விளைவைக் கவனிப்பதற்கு அவற்றின் விளைவைக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளாவிட்டாலும், மற்றப் புன்செய் நிலங்களுக்கு வசா கொடுப்பதுபோலவே அவற்றிற்கும் வசா கொடுக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்திருக்கிறது. பஞ்ச காலங்களில் விளைவை அதிகப்படுத்துவதற்குச் சமுசாரிகளுக்கு உற்சாகமிருக்க வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்யப்படுகிறது.

Madras Govt.Press Note No. 171.

4. விபசாய நீர்வாங்கிகள் (Pump) கருவிகள் முதலியன வாங்குவதற்காகக் கடன் கொடுக்கும் விதிகளை விபசாயிகளின் சௌகரியத்திற்காகக் கீழே கண்ட விதமாகத் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. 50 ரூபா வரை சில்லா விபசாய அதிகாரி கடன் கொடுப்பார். 250 வரை பதிலித் (Deputy) தாசில்தாரும் 500 வரை தாசில்தாரும் 1000 வரை டிவிசனல் ஆபீசரும் 2500 வரை கலக்டரும் 10,000 வரை நிலவரிக் கழகமும் (Board of Revenue) அதற்கு மேல் அரசாங்கமும் கடன் கொடுத்து வரும். கடன் தேவையானவர்கள் தங்கள் தேவைக்குத் தக்க கடன் கொடுக்கக் கூடிய அதிகாரிக்கு மனுச் செய்துகொள்ள வேண்டும்.

Madras Govt. Press Note No. 172

5. நருமதை யாற்றுக்குத் தெற்கே தென் சூரத்துப் பிராந்தியத்தில் நௌசாரி (1027 A. L. F.) பருத்தி மிகுதியாக விளைகிறது. நம் நாட்டுச் சிறந்த பகுதிகளிலே அதுவும் ஒன்றாகும். அதற்கு வெளி நாடுகளிலும் நல்ல விலை கிடைப்பதால் அதனோடு கோகரி ஏ. சூர்ட்டிதேசி, புரோச்சு முதலிய தாழ்ந்த தரப் பருத்திகளையும் கலந்து வருகின்றனர். அதனால் விலைக் குறைவும் கேவலமும் வருவதோடு அந்தப் பருத்திக்குள்ள மதிப்பும் குறைவதால், அதனைத் தடுப்பதற்காக ஒரு சட்டம் செய்யக் கருதி, பம்பாய் அரசாங்கம் அதன் மசோதாவையும், அரசாங்கப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறது.

Bombay Information.

6. நிலக்கடலை கம்பு எள் தட்டாம் பயறு முதலிய புன்செய்ப் பயிர்களில் விழும் கம்பளிப் பூச்சிகளை நவம்பர்மீ முதல் தேதியிலிருந்து கையால் பொறுக்கியும் அவற்றின் முட்டைகளை எடுத்து அழுத்திக் கொன்றேனும் அல்லது ஆழமான குழிகளில் போட்டேனும் அவற்றையொழித்து விட வேண்டும். இந்த விளம்பரம் வட ஆற்காடு சில்லாவில் அடுத்த செப்டம்பர்மீ 30௳ வரை அமுலிலிருக்கும். கம்பளிப் பூச்சிகள் விழுந்திருப்பதாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் கிராமங்களுக்கு அடுத்திருக்கும் கிராமங்களின் அதிகாரிகள் அப்படிப் பூச்சிகள் தங்கள் கிராமங்களில் விழுவதை யுடனே கலக்டருக்கு அறிவிக்க வேண்டும். மேலே சொல்லிய விளம்பரத்தில் கண்டபடி கம்பளிப் பூச்சியை யொழிப்பதற்கான முறையைக் கிராமச்சாவடியிலும் மற்றும் முக்கியமான இடங்களிலும் அறிவிப்புக்களையொட்டியும் கிராமம் பூராவும் தமுக்கடித்தும் அந்த விளம்பரம் அமுலுக்கு வருவதற்கு முன்னதாகவே பிரசுரம் செய்ய வேண்டும். விபசாயப் பூச்சிகள் பிணிகள் சட்டத்தின்படி விபசாய அதிகாரிகளையும் நிலவரிப் பார்வையாளர்களையும் (Revenue Inspectors) கிராமப் பெரிய தனக்காரர்களையும் அவரவர் பிரதேசத்திற்கு அதிகாரிகளாகநியமிக்கப்பட்டிருக்கிறது.

Director of Agriculture (Madras) Press Note.

7. திருநெல்வேலியிலும் கோயம்புத்தூரிலும் உப்பம் பருத்தியும் கருங்கண்ணிப்பருத்தியும் கலந்து விதைப்பதால் பருத்தி அதிகமாக வெடிக்கிறதென்று தவறுதலாகக் கருதப்படுகிறது. இது பிசகென்பதைச் சமுசாரியின் நிலங்களிலேயே பரீட்சை செய்தும் காட்டப்பட்டிருக்கிறது. கருங்கண்ணி மட்டும் விதைக்கும் பொழுது அது வெடிப்பதைக் காட்டிலும் குறைவாகவே, உப்பமும் கருங்கண்ணியும் கலந்து விதைக்கும் பொழுது அது (கருங்கண்ணி) வெடிக்கிறது. அப்படிக் கலந்து விதைக்கும் பொழுது உப்பம் பருத்தி கருங்கண்ணியை அமுக்கிப் பார்வைக்கு நன்றாக இருக்கிறது; உப்பம் கொஞ்சம் அதிகமாகவும் வெடிக்கிறது. என்றாலும் கருங்கண்ணியைத் தனியாக விதைப்பதே கலப்பாக விதைப்பதைக் காட்டிலும் நல்லது. அப்பொழுது கருங்கண்ணி அதிகமாகவும் வெடிக்கும், பஞ்சின் தரமும் உயர்ந்ததாக இருக்கும். கருங்கண்ணிப்பருத்தியிலும் உப்பம் பருத்தி குறைந்ததரப் பருத்தியேயாகும்.

Director of Agriculture, Madras.

8. கோயம்புத்தூரில் அந்த நாட்டுக் கருங்கண்ணி விதையை விதைப்பதைக் காட்டிலும் திருநெல்வேலிக் கருங்கண்ணி விதையை விதைப்பதால் அதிகச் சேதமில்லாமல் முளைக்கிற தென்றும் அதிகமாக வெடிக்கிறதென்றும் ஒரு தப்பபிப்பிராயம் இருந்து வருகிறது. அந்த அபிப்பிராயம் தப்பென நிரூபித்துக் காட்டுவதற்காகக் கோயம்புத்தூர்ப் பண்ணையில் இரண்டுவகை விதைகளையும் விதைத்துக் காட்டப்பட்டது. முளைப்பதிலும் வெடிப்பதிலும் வித்தியாச மொன்றுமில்லை. ஆதலால், திருநெல்வேலி விதைக்காக அதிகவிலை கொடுத்தும் செலவழித்தும் வருவது, சமுசாரிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டிய நட்டமென்றே சொல்லவேண்டும்.

Director of Agriculture Madras.

9. தென்னாட்டில் பெரிய மஞ்சள் சோளமும் வட நாட்டில் பச்சைச் சோளமும் (Pach Joma) சாதாரணமாகத் தீவனத்திற்காக விதைக்கப் படுகின்றன. தீவனத்திற்கான சோள நாற்றில் பச்சைப் பொருள் நிறைய இருக்கவேண்டும். அதனைக் கொஞ்சமும் பாக்கி விடாமல் மாடுகள் தின்ன வேண்டுமென்றால், அதன் அடிதொட்டு நுனிவரை இனிப்பதிகமாக இருக்கவேண்டும்; உருசியில்லாமலாவது வெறும் சோறுகவாவது (Pith) இருக்கக்கூடாது. இதனை உத்தேசித்துக் கோயம்புத்தூரில் A. S. 3355 என்று ஒரு நாற்று வகை உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. அது பெரிய மஞ்சள் சோளத்தைக் காட்டிலும் 30 சதம் அதிகமாகவும் உண்டாகிறது; அதில் 13 சதம் இனிப்பும் இருக்கிறது. நந்தியாலில் N. 26/152 என்றொருதரம் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. அந்தத் தண்டுகளும் பச்சைச் சோளத்தைக் காட்டிலும் இனிப்பாக இருக்கின்றன. தீவனத்திற்காகச் சோள நாற்று விதைக்க விரும்புகிறவர்கள் அவரவர்கள் தாலுகாவிலிருக்கும் விவசாயஞ் செய்முறைக் காரரிடம் (Agricultural Demonstrator) இந்தப் புதிய தர விதைகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அவற்றைப் பற்றி வேண்டும் வேறு தகவல்களும் அவர்களிடம் தெரிந்துகொள்ளலாம்.

Director of Agriculture, Madras.

10. எண்ணெய் வித்து விற்பனரால் ஒரு புதிய தரமான எள்ளு விதை (S. I. 89) உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. அது அடர்த்தியாக வளருகிறது; அதிகமாகவும் விளைகிறது; 85 நாட்களிலும் விளைகிறது. விதை செந்தவிட்டு நிறமுதல் கறுப்பு நிறமாகவும் இருக்கிறது. 50 சதம் எண்ணெய் காண்கிறது. அதனை இறைவைப் பயிராகவும் விதைக்கலாம்; வானாவாரிப் பயிராகவும் விதைக்கலாம். அதனை விதைப்பதால், சமுசாரிகளுக்கு ஏக்கரின் பேரில் ரூ. 3 அதிகமாகக்கிடைக்கக்கூடும்.

Director of Agriculture, Madras.

11. எலுமிச்சம் பழச் சாற்றைக் குறைந்த செலவிலும் எளிய முறையிலும் பிழிந்து ஒரு வருடம்வரை அதன் மணமும் குணமும் கெட்டுப்போகாதபடி காப்பாற்றி வர ஒரு முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதனைத் தெரிய விரும்புகிறவர்கள் கடப்பை சில்லா கொடூரில் பழ ஆராய்ச்சி (Fruit research station) நிலயத்திலிருக்கும் பழ விற்பன்னருக்கு (Specialist) எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

Director of Agriculture, Madras.

12. ஆமத் நகரிலும் ஈயோலா (Yeola) விலும் மளிகோனிலும் (Maligone) கூட்டுறவுக் கைத்தொழிற் சங்கங்கள் (Co-operative Industrial Association) அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்களின் மூலம் கைத்தறி நெசவாளருக்கு நூலும் சாயமும் மொத்த விலைப்படி கொடுத்துவரப்படும். அவர்கள் நெய்யும் துணிகளைக் கிரயத்திற்கு வாங்கிக்கொள்ளவும் கூடும்; அல்லது வெளியூருக்கு அனுப்பி விற்றுத்தரவுங் கூடும். ஆமத் நகர்ச் சங்கம் கம்பளிப்போர்வையும் விற்றுத் தரும். இப்பொழுது, அது பட்டாளத்துக்காக 25,000 போர்வை நெய்து தரவும் ஏற்பாடு செய்திருக்கிறது.

Bombay Information.

ஆ. கிராமப் புனருத்தாரணப் பொதுத்தலதாபன அரசாங்கச் செய்திகள்

1. ஏழாம் எட்வர்டு மன்னர் உருவந் தாங்கிய ஒருரூபா அரைரூபா வெள்ளிநாணயங்கள் 1942 மே 31ம் உக்குப் பின் சாதாரணமாகச் செலாவணியாகாது. அரசாங்கக் கசானுக்களிலும் தபால் ஆபீஸ்களிலும் இருப்புப் பாதை நிலயங்களிலும் அதற்குப் பின்னும் செப்டம்பர் மீ 30ம் உ வரை செலாவணியாகும். அதற்குப் பின் மறு அறிவிப்பு வரை பம்பாய் கல்கத்தா சென்னை ரிசர்வ் பாங்கு வெளியிடும்(IssueDepartment)லாகா அலுவலகங்களில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

Gazettee of India.

2. நம் மாகாண அரசாங்கம் தூத்துக்குடியில் சமீபத்தில் மீன்தொழிற் பள்ளியொன்று ஏற்படுத்தி வர உத்தேசித்திருக்கிறது. அது ஆசிரியர்களுக்கும் பொது சனங்களுக்கும் கடல் மீனுள்படச் சகல மீன்களைப் பற்றியும் வேண்டியன போதித்துவரும். ஓராண்டிற்கு மேலாக இருபத்தைந்து மாணவர்களுக்குக் கற்பிக்கும் சில மாதங்களிலேயே படித்து முடிப்பதற்கும் இரண்டு மூன்று வருடங்கள் அதிகமாகப் படிப்பதற்கும் வேண்டிய ஏற்பாடு செய்யும்.

வர்த்தக ஊழியன்.

3. பூனா ஜில்லாவில் தலிகான் தாம்தீரில் உள்ள சாம்பார்களுக்குத் திருந்திய மாதிரியாகத் தோற்பதனிடும் தொழிலைப் பம்பாய்க் கைத்தொழில் இலாகா கற்றுக் கொடுத்திருக்கிறது. அவர்களுக்காக ரூ. 350 வரை செலவு செய்து பதனிடுவதற்கான கருவிகள் வாங்கிக் கொடுத்தும் ஒரு கொட்டகை போட்டுக் கொடுத்துமிருக்கிறது. அவர்கள் அந்தத் தொழிலால் நல்ல இலாபமடைந்து வருகின்றனர். அவர்கள் பிள்ளைகளை அடுத்த பக்கத்திற்கு அனுப்புவதற்கு விரும்பாமல், தங்கள் செலவிலேயே ஒரு ஆசிரியரை நியமித்துக் கிண்டர் கார்டன் பள்ளிக் கூடமொன்றும் தங்களூரில் நடத்தி வருகின்றனர்.

Bombay Information.

4. கன்னடம் ஜில்லா மசலியிலும் இரத்தினகிரி ஜில்லா மால்வானிலும் மீன் உலர்த்தும் தொழிலை 1944ம் ஆண்டு மார்ச்சு மீ முடியக் கற்றுக் கொடுப்பதற்காகப் பம்பாய் அரசாங்கம் வேண்டும் ஏற்பாடு செய்திருக்கிறது. புது மாதிரியாக உலர்த்துவது சிறந்த முறையாக இருப்பதால், மொத்த வியாபாரிகளும் அப்படி உலர்த்திய மீனை ஆத்திரமாக வாங்கிக்கொள்ளுகின்றனர். அவர்கள் இன்னும் அதிகமாக வாங்கிக்கொள்ளுவதாகவும் கைத்தொழிலிலாகாவிற்கு எழுதியுமிருக்கின்றனர். கொழும்புக்கு முன் அனுப்பிவந்த மீன் வியாபாரத்தைத் திரும்பவும் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப் படுகிறது.

Bombay Information.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. 1925ம் ஆண்டில் பம்பாய்க் கூட்டுறவுச் சட்டத்தின் படி, விருத்தியான விபசாய முறைச் சங்கங்களுக்கு (Better farming Societies) பண உதவி செய்து வர, பம்பாய் கிராமாந்தர அபிவிருத்தித் தலைவருமாகிய (Director of Rural Development) கூட்டுறவுப் பதிவாளருக்குப் பம்பாய் அரசாங்கம் அதிகாரம் கொடுத்திருக்கிறது. அவர் அப்படிச் சங்கங்களுக்கு முதல் ஆண்டிற்கு 100 ரூபா உதவியாகத் தருவார். இப்போதிருக்கும் சங்கங்கள் உதவி பெறத் தகுதியுள்ளனவாக இருப்பின், அவற்றிற்கும் உதவிதரப் படும்.

இரண்டாவது வருடமுதல் முந்திய வருடச் சிப்பந்திச் செலவில் பேர்பாதி அல்லது

சங்கத்தின் முந்திய வருடக் கைப்பிடிப் இவற்றில் எது அதிகமோ அது நூற்றுக்கு மேல்போகா திருக்குமென்றால், அவ்வளவிற்கு உதவிதரப் படும். சங்கம், அதிக உதவியில் லாமல், விபசாயக் கருவிகள் வாங்கவோ ஆடு மாடு கோழி இனங்களை விருத்தி செய்வதற் காக அவற்றை வாங்கவோ கூடியதில்லை யென் றால், அதற்காக அதிக உதவியும் செய்யலாம்.

Bombay Information.

2. ஆமத் நகர் சில்லா கோப்பர்கான் தாலுகா புண்டாம்பா கூட்டுறவுக் கடன் சங்கம் 60 உறுப்பினர்களிடமிருந்து 66 மணு சோளம் வாங்கி, அதனைத் தேவையான உறுப் பினர்களுக்கு விபசாயக் காலத்தில் கடன் கொடுத்திருக்கிறது. நல்ல திருத்திய விதையும் கடனாகக் கொடுக்கிறது. அறுவடையானதும் கால்வாசி வட்டியும் சேர்த்துச் செலுத்திவிட வேண்டும். வட்டி சரிக்குச் சரியாகவும் அரை வாசியாகவும் வெளியில் கடன் வாங்கி வந்தவர் கள் இந்தத் திட்டத்தால் மிகுந்த பயனடைந்து வருகின்றனர்.

Bombay Information.

3. கிராமப் பஞ்சாயத்துக் கழகங்கள் வாங்கும் வானொலியைப் பள்ளி மாணவர்களுக் கும் பயன்படக் கூடியதாகப் பள்ளிக்கூடச் சுற்றுக் குள்ளாகவும் அமைக்கலாம். ஆனால், அப்படியமைப்பதால், மாலை நேரம் பிறர் அதனைக் கேட்பதற்கும் சௌகரியமிருக்க வேண்டும்.

4. இதுவரை நம் மாகாணத்தில் வாழ்க்கை உத்தரவாதம் செய்வதற்கு மட்டும் தென்னிந்தியக் கூட்டுறவு உத்தரவாதச் சங்கம் இருந்து வருகிறது. தீக்கோளுக்கும் மற்ற வற்றிற்கும் உத்தரவாதம் செய்யக் கூட்டுறவுச் சங்கம் இல்லாதிருந்த குறையை நீக்க, சென்னை அரண்மனைக்காரன் தெரு 119-ம் நிர் கட்ட டத்தில் கூட்டுறவுத் தீக்கோள் பொது உத்தர வாதச் சங்கமொன்று அமைக்கப்பட்டிருக்கி றது. நம் மாகாணப் பதிவாளர் யோசனையின் படி, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தாங்கள் கொடுக்கும் கடனுக்கு ஈடாக வைக்கப்படு கிற பொள்களுக்கு அந்தச் சங்கத்தில் உத்தர வாதம் பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டுறவு.

5. ஒரு புதிய விதியைச் செய்துகொள் ளுவதென்றாலும் அல்லது பழைய விதியை இரத்துச் செய்து கொள்ளுவது அல்லது மாற் றிக்கொள்ளுவ தென்றாலும் மகாசபையே செய்துகொள்ளக்கூடும். அப்படித் தீர்மான மும் ஆசராயிருக்கிறவர்களில் பெரும்பாலார் சாதகமாக இருந்தால் மட்டும் நிறைவேறிய தாகக் கருதப்படும். பதிவாளருடைய அங்கீ காரம் பெறுவதற்கு முன்னதாகவும் அஃது அமுலுக்குவராது. கடன் சங்கங்களின் 57-வது விதியை இந்த மாதிரியாகத் திருத்திக்கொள்ள வேண்டும். மற்றும் சங்கங்களிலும் இதே மாதிரி திருத்தம் செய்துகொள்ள வேண்டும்.

ஈ. கூட்டச் செய்திகள் : தீர்ப்புக்கள்

கூட்டுறவுச் சங்கத்திற்குச் சேரவேண்டிய தொகைக்காக ஏலத்தில் கொண்டுவரும் சொத் தில் பாத்தியமுள்ளவர் அந்தச் சப்தியை இரத் துச் செய்யவேண்டு மென்று கூட்டுறவு அதி காரியிடம் மனுக்கொடுத்து நடவடிக்கை நடத் திக்கொள்ள வேண்டு மென்றும் அந்த மனு அவருக்கு விரோதமாகப் போனால் அந்த உத் தரவை இரத்துச் செய்துகொள்ள 6 மாதத் திற்குள் சிவில் கோர்ட்டில் வியாச்சியம் செய்து கொள்ளலா மென்றும் சட்டமிருக்கிறது. அப் படி வியாச்சியம் செய்வதற்கும் பதிவாளரின் (Registrar) அனுமதி பெற்றிருக்கவேண்டு மென்று வாதிக்கப்பட்டு அசல் அப்பீல் கோர்ட்டுகளிலும் அப்படியே முடிவும் சொல் லப்பட்டது. அதன் மேல் சென்னை உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல் செய்ததில் அப்படிப் பதி வாளரின் அனுமதி வேண்டியதில்லை யென் றும் இந்த நடபடிக்கைகளுக்கிடையில் சொத் தை மூன்றாவது ஆள் ஏலத்தில் எடுத்திருந்த போதிலும் சிவில் கோர்ட்டுத் தீர்ப்பு அவருக்கு விரோதமாகும் பொழுது அந்த ஏலமும் இரத் தாகிவிடு மென்றும் S.A. No. 269 of 1940-ல் 14—9—41 உ யன்று நீதிபதி வெங்கடரமண ராவால் தீர்ப்புச் சொல்லப்பட்டிருக்கிறது.

The Madras Journal of Co-operation.

12. அறிவுரைத் திரட்டு:

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்

1. நம் நாட்டின் மொத்தப் பரப்பில் நாலில் ஒரு பங்கில்தான் நெல் சாகுபடியாகிற தென்றாலும் இதரப் பயிர்களைக்காட்டிலும் அதிகம் சாகுபடியாகிறது நெல்தான். இப்படியிருந்தும் நம்முடைய நாட்டிற்குப் பர்மாவிலிருந்து சுமார் 12 இலட்சம் டன் அரிசி இறக்குமதியாகிறது. இதனைப் பத்துக் கோடி ரூபா விலை கொடுத்து வாங்கியும், நம் உள்ளூர் நெல் விலை வாசி குறைந்துபோய் விடுகிறது. ஒன்று அன்னிய தேசத்திலிருந்து இறக்குமதியாவதைக் காப்பு வரியால் தடுக்க வேண்டும்; அல்லது இறக்குமதியாகுமளவு நெல்லை இங்கேயே அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். இதற்குப் பொறுக்கி யெடுத்த சுத்தமான நெல் விதைகள் முதல் சாதனமாகும்.

சென்னை விபசாய இலாகா கோயம்புத்தூர் ஆடுதுறை மறுதேரு முதலிய விபசாயப் பண்ணைகளில் ஏழு வருடங்களாகச் செய்த சாத்திர ஆராய்ச்சியின் பயனாகச் சிலாக்கியமான விதைகளைப் பொறுக்கியெடுத் துண்டாக்கியிருக்கிறார்கள். இப்படி 25 தினுசு நெல் விதைகள் ஆடுதுறையில் பொறுக்கியெடுத்திருக்கிறார்கள். ஷை விதைகளைக்கொண்டு சாகுபடி செய்வதால் 100க்கு 10 முதல் 30 வரையில் நெல் கூடக் காண்கிறது. அதாவது சராசரி ஏகர் ஒன்றுக்குச் சுமார் ரூ. 5 வருமானம் கூடக் கிடைக்கிறது. நமது மாகாணத்தில் 100 இலட்சம் ஏகர் நெல் சாகுபடியாகிறது. பொறுக்கி எடுத்த நெல் விதை ஒன்றினாலேயே நமது மாகாணத்திற்கு மொத்தம் 5 கோடி ரூபா கிடைக்கும். இந்த ஒரு அபிவிருத்தியே பர்மா தேசத்திலிருந்து இறக்குமதியாகும் நெல்லைத் தடுக்கக்கூடும் அல்லவா ?

மொத்தம் 100 இலட்சம் ஏகராவில் சுமார் 12 இலட்சம் ஏகரில்தான் இந்தப் பொறுக்கி யெடுத்த நெல் விதைகள் விதைக்கப்படுகின்றன. ஆகையால், பாக்கியிருக்கும் 88 இலட்சம் ஏகரிலும் பொறுக்கியெடுத்த விதைகள் விதைக்கவேண்டியது அவசியமல்லவா ?

இதற்குச் சர்க்கார் பண்ணையிலிருந்து உண்டாகும் விதைகள் மட்டும் போதா. ஆகையால், கவனமாகச் சாகுபடி செய்பவர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் விதை நெல் அபிவிருத்திக்குப் பாடுபட்டால்தான், எல்லா நிலங்களிலும் பொறுக்கி எடுத்த விதை நெல்லை விதைக்கலாம்.

பொறுக்கி எடுத்த நெல் விதையை 8 செண்டு நிலத்தில் 8 பட்டணம்படி தெளித்து இதனை ஒரு ஏகர் நிலத்தில் நடலாம். இதனால் விதைகள் அளவிலேயே நம் மாகாணத்துக்கு ஒரு கோடி ரூபா மிச்சமாகும். நாற்று நடுவதிலும் சிக்கனம் இருக்கிறது. பொறுக்கி யெடுத்த நெல் விதைகளைக் கொண்டு கோயம்புத்தூரில் ஏகர் ஒன்றுக்கு 7000 இராத்தலும், ஆடு துறையில் ஏகர் ஒன்றுக்கு 4000 இராத்தலும் சாகுபடி செய்திருக்கிறதுபோலவே, நாமும் செய்தால், எவ்வளவோ இலாபமிருக்கிறது. பொறுக்கி யெடுத்த விதைகளை நல்ல இயற்கைவளமுள்ள நிலங்களில் சாகுபடி செய்தால், நல்ல நிறையுள்ள தானியமும் சத்துள்ள தானியமும் கிடைக்கும். செயற்கை வளமேயுள்ள நிலங்களில் தானியம் நிறையுமிராது; அத்துணை சத்துள்ளதாகவுமிராது.

நீடாமங்கலம் இராவ் சாகீப் சேதுராமய்யர்.

2. கரும்பை இலாபகரமாகச் சாகுபடி செய்வதற்கான பத்துக் கற்பனைகள்.

1. அதிகமாக உலர்ந்தோ அல்லது ஈரிப்பாகவோ இல்லாமல் பருவமாக இருக்கும் நிலைமையில் நிலத்தை ஆழமாக உழுதிட வேண்டும். நல்ல பலன் பெற வேண்டுமானால், உழவுக்குப் பின் கட்டி உடைப்புக் கிடையில் இரண்டு வாரமும் சால்திறப்புக்கும்(Opening

of Furrows) கரும்பு நடுகைக்கும் இடையில் இரண்டு வாரமும் கழிய வேண்டும்.

2. நிலத்துக்குப் பசுந்தாளுரமிட வேண்டும். இளக்கமான நிலமானால் (Sann) குழையிடவேண்டும். கெட்டி நிலமானால் தக்கைப் பூண்டை யிடவேண்டும். கரும்புச் சாகுபடிக்கு முன் நிலக்கடலை, கம்பு, சோளம் சாகுபடி கூடாது.

3. சாலுக்குச் சால் நாலடி இடைவெளி விடவேண்டும். ஏகருக்கு 10000 கணு (Sett) வுக்கு மேல் நடவுங் கூடாது. நல்ல திணுசையே நடவேண்டும். பிப்ரவரிக்கு முன்னதாகவே நடுகையை முடித்துவிட வேண்டும்.

4. காலகம் (Nitrogen) 300 இராத்தலுக்கு மேல், மேலுரமாக (top dressings) இடக்கூடாது. நவச்சிவயக் கந்தகையையும் எண்ணெய்ப் பிண்ணாக்கையும், முறையே ஒன்றுக்கிரண்டு தாரணையாக இடவேண்டும். காலகக் கந்தகை விலை பிரியமாக இருந்தால் எண்ணெய்ப் பிண்ணாக்கை அதிகமாக உபயோகிக்க வேண்டும். எந்தக் காரணத்தையிட்டும் எண்ணெய்ப் பிண்ணாக்கிலிருந்து கிடைக்கும் காலகத்தைக் காட்டிலும் நவச்சிவயக் கந்தகையிலிருந்து கிடைக்கும் காலகம் அதிகமாக இருக்கக் கூடாது.

5. நிலத்தில் நீரை அதிகமாகப் பெருக்கக் கூடாது. (Do not flood the Land) முளை கிளம்பி வரும்பொழுதும் பயிரின் இளமையிலும் தண்ணீர் குறைவாகவே பாய்ச்ச வேண்டும். மழைப் பருவ ஆரம்ப காலத்தில் கரும்பு வெகு வேகமாக வளரும்பொழுது தண்ணீரை அதிகப்படுத்த வேண்டும். பூப் பிடிக்க ஆரம்பித்துக் கரும்பு முதிரும்பொழுது தண்ணீரைக் குறைத்திட வேண்டும்.

6. கோடைகாலத்தில் ஒவ்வொரு இறைவைக்கும் பின்னதாகக் கொத்திவிட (inter-culture) வேண்டும்.

7. நன்றாக முற்றியதும் கரும்பை வெட்ட வேண்டும். இனிப்பை அளக்கும் கருவி (Sacchrometer) யால் அதனைச் சோதித்துப் பார். அது ரூ.4-8-0 முதல் 5 ரூபா வரைதான் கிரயமாகும்.

8. சாறு அதிகமாகப் பிழிகிற ஆலையில் கரும்பினின்றும் சாற்றைப் பிழி.

9. கீழே சாம்பற் குழியும் அதற்கு மேல் துளைகள் போட்டுள்ள (grating) தட்டையுமுடைய உலை (furnace) யில் கொதிக்க வை. இதனால் விறகு மிச்சமாகும்; நன்றாகவும் எரியும்.

10. கரும்பை வெட்டிய பிறகு நிலத்திலிருக்கும் அதன் தூரை எரித்துவிடக்கூடாது. அதனைச் சேர்த்துச் (compost) சேர்க்கை உரமாக்க வேண்டும்.

Bombay Information.

ஆ. கிராமப் புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்

1. உபாத்தியாயர்களும் கூட்டுறவும்

வெங்களூர் என்பது புதுக்கோட்டையைச் சார்ந்த ஒரு சிறு கிராமம். இவ்வூரில் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. இச் சங்கத்தில் இப்பொழுது 351 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பங்குத் தொகையாக ரூ. 6500 வரை சேர்ந்திருக்கிறது. இதுவரையில் சுமார் ஒரு இலட்ச ரூபா கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவணை கடந்த கடன்கள் சொற்பமே. சங்கத்தின் சேம நிதி ரூ. 3000. இதன் காரியதரிசி இவ்வூர்ப் பள்ளித்தலைமை யாசிரியர். ஒரு பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் அதே கிராமத்தைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கத்தில் காரியதரிசியாயு மிருப்பதால் கல்வி கூட்டுறவு ஆகிய இரண்டு வேலைகளும் ஒரே கட்டடத்தில் நடப்பது எளிதாயிருக்கிறது. கிராமங்களில் ஐக்கிய இயக்கம் பரவக் கிராம ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை இது உருசுப்

படுத்துகிறது. ஆசிரியர்கள் ஊக்கத்தினால் சிற்சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் இனிது நடைபெறுகின்றன.

2. பணம் தரும் பால்: நம் நாட்டில் உலகத்திலுள்ள பால்மாடுகளில் மூன்றிலொரு பங்கு பால்மாடுகளிருக்கின்றன. உருசியாவுள் பட ஐரோப்பா பூராவிலுமுள்ள அளவு இருக்கிறதென்றும் சொல்லலாம்; என்றாலும், ஐரோப்பாவில் கிடைக்கும் பாலில் ஐந்திலொரு பங்குதான் நம் நாட்டில் கிடைக்கிறது. ஐரோப்பா பால்மாடுகளில் நம் நாட்டுப் பசுக்களிலிருக்கிறதைக் காட்டிலும் வெண்ணெய் குறைவாகவே யிருக்கிறது; நம் நாட்டு எருமைகளில் பசுவிலிருப்பதைக் காட்டிலும் வெண்ணெய் அதிகமாகவுமிருக்கிறது. பஞ்சாப் பசுவொன்றில் ஆண்டிற்கு 1500 இராத்தல் பால் பீச்சப்படுகிறது. வங்காளப் பசுவில் 300 இராத்தலுக்கும் குறைவாகவே பீச்சப்படுகிறது. நம் நாட்டில் எவரும் இரண்டு மூன்று பசுக்களுக்குமேல் வைத்திருப்பது அபூர்வம். நம் நாட்டில் கையால் கறக்கும் பால் மட்டும் ஆண்டு தோறும் 180 கோடி ரூபாவுக்கு விலையாகிறது. நம் நாட்டுப் பசுக்களுக்கு நல்ல ஊட்டம் கொடுப்பதால் இப்பொழுது கறக்கும் பாலைப்போல் நான்கு ஐந்து மடங்கு கறக்கும் படியாகவும் செய்யலாம். அப்படிச் செய்வதற்கு அதிக நேரமும் சிரமமுங்கூட வேண்டியதில்லை.

Industry.

3. அரிசி யரைக்கும் ஆலை, நாட்டின் இலாபத்திற்காக இருக்கவில்லை. அது, பலர் தமக்கு வாய்க்கும் ஓய்ந்தநேரத்தில் செய்யக் கூடிய வேலையைக்கெடுத்து, ஒரு சிலர் பேராசையைத்திருப்தி செய்வதற்காகவே யிருக்கிறது. கோடிக் கணக்கான பேர்கள் உண்ணும் உணவின் சத்தைக் குறைத்தும் வருகிறது. அரிசி யாலையில் அரவையாகும் நூறு மணு நெல்லைக் குத்தி அரிசி யாக்க 150 பேர் வேண்டும். அப்படி நெல்லைக் குத்தி அரிசி யாக்கும் வேலையை அனேகர் செய்யவுங் கூடும். அவர்களுக்கு வேறு வேலையும் கிடைக்காத நிலைமையில் அவர்கள் கடனுடன் பட்டினியும் பசியுமாகவே சங்கடப் படுகின்றனர்.

The Social Welfare.

4. கிராமங்களை அபிவிருத்தி செய்வதே தங்களுக்கும் மிகுந்த திடமும் ஆதரவும் தரக் கூடுமென்பதைப் பட்டினங்களி விருப்பவர்கள் உணரவேண்டும். கிராமங்களைப் புறக்கணித்தால், அஃது அவற்றினின்றும் உயிர் பெறும் பட்டினங்களையும் நகரங்களையும் பாதிக்காமற் போகாது. சுற்றுப் பக்கங்களில் செழிப்பான கிராமங்களில்லாத எந்த நகரமும் அதன் முக்கியத்தையும் இழந்து விடும்.

கொச்சி திவான் A. F. W. Dixon.

5. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவர் உருசுவெல்ட்டை (Roose velt) அங்கேயுள்ள முதலாளிமார்கள் எப்பொழுதும் குறைவாகவே பேசுகின்றனர்; என்றாலும், ஏழைகள் அனேகமாக, அவர் தங்களுக்குச் செய்திருக்கும் நன்மைக்காக, அவரைத் தெய்வமாகவும் கொண்டாடி வருகின்றனர். சென்ற ஐந்தாண்டுகளாக அந்த நாடுகளிலுள்ள வக்கற்றவர்களுக்கும் திக்கற்றவர்களுக்கும் சமூகப் பாது காப்புச் சட்டத்தின் (Social Security Act) மூலமாக அவர் செய்திருக்கும் ஏற்பாடுகளே அவரை அத்துணை தூரம் நேசிக்கும்படி செய்திருக்கிறது. வேலை கிடைக்காத தொழிலாளிகள் வேலை செய்ய முடியாதபடி கை கால் ஊனமான தொழிலாளிகள் அறுபத்தைந்து வயதுமாகி உணவிற்கும் ஆடைக்கும் வழியில்லா திருப்பவர்கள் மற்றும் வக்கற்றிருக்கும் குருடர்கள் தாய் தகப்பனற்ற குழந்தைகள் கர்ப்பிணிகள் கைக் குழந்தைகள் முதலிய பலரும் அவர் செய்திருக்கும் ஏற்பாட்டினால் பட்டினியின்றியும் கவலையின்றியும் வாழக் கூடும். அவரே யில்லை யென்றால், அமெரிக்காவில் இதற்குள்ளாகப் பெரும் புரட்சியு முண்டாயிருக்கும். இப்படி யாக ஏழைகளுக்கும் உதவியற்றவர்களுக்கும் உதவக் கூடிய (Helping the helpless) சுயராச்சியமே நம் நாட்டிற்கு வேண்டும். (சாரம்.) Modern Review.

Chaman Lal.

அஃது ஒருவரையொருவர் சுறண்டியும் சூறையாடியும் (Exploiting others) பிழைக்கும் பிழைப்பிற்கிடந்தராத சுயராச்சியமாகவும் இருக்கவேண்டும். (ப-ர்)

6. இப்போது நடைபெறுகிற போருக்குப் பிறகு என்னென்ன சீர்திருத்தங்கள் ஏற்படப்போகின்றன என்று என்ஞல் சொல்லக் கூடவில்லே. ஆனுல், ஒன்று மட்டும் திட்டமாய் இப்பொழுது தெரிகிறது. பழைய முதலாளி முறையானது சீர்குலேந்துவிட்டது. அது நமது நாட்டில் நீடிக்க முடியாது என்பதற்குச் சில காரணங்களுண்டு. சர்க்காரின் தேவைகளே முக்கியமானவை. தனி மனிதர்களின் நலத்தைவிடப் பொது நலமே பெரிதாகிவிடும். முதலாளிகளின் நிலயங்கள் சர்க்காரின் ஆதிக்கத்திற்கு உட்படவேண்டியிருக்கும். உலகத்தின் பல பாகங்களில் நகரங்களும் கிராமங்களும் வெடி குண்டு வீச்சிஞல் நாசமடைந்து வருகின்றன. இவற்றை மறுபடியும் சீரமைக்கும் வேலேயில் கோடிக்கணக்கான ஏழை மக்கள் பாடுபடவேண்டும். பணக்காரரிடமிருந்து பொருள்களே எடுத்தே இந்த வேலே முற்றுப் பெறும். பணக்காரரிடமிருந்து அதிகமாக வரி வசூலித்தால்தான் சீரமைப்பு வேலே செய்ய முடியும். இந்த நிலேமை வந்தே தீரும். வருங்காலத்தில் ஏற்படக்கூடிய தேசங்களேயெல்லாம் சரிக்கட்டுவதற்கு முதலாளிகளுடைய இலாபத்தைப் பங்கிடவேண்டும். இப்படி வசூலிக்கப் படுகிற பொருள்கள் சர்க்காரிடம் சேமித்து வைக்கப்படும். பலகோடி மக்களுக்கு வேலே கொடுப்பதும், நாட்டின் கைத்தொழில்களே வளர்ப்பதும் சர்க்காரின் கடமையாகும். இந்த நிலேமையில் கூட்டுறவுச் சத்தி பரவாமலிருந்தால், அதிகாரம் அளவு கடந்து அதிகரித்துவிடும். பல நாடுகளில் பரவிவருகிற கூட்டுறவு இயக்கமானது தனி நபர்களின் சுயமரியாதையைப் பாதுகாத்து வருகிறது. பணம் படைத்திருப்பதுமட்டும் பெரிதல்ல. அத்துடன் குணம் நேர்மை ஒழுங்கான நடைமுறை ஆகியவை கலந்திருக்க வேண்டும். இவையெல்லாம் பொது நலத்திற்கு உதவும்படி கட்டுப்பாடு செய்யவேண்டும். மக்களின் வாழ்க்கையில் ஏற்படப்போகிற அரிய பெரிய சீர்திருத்தங்களுக்கு உகந்த இயக்கங்களில் கூட்டுறவு இயக்கமானது தனிச் சிறப்பு வாய்ந்ததாயிருக்கிறது.

திருவாங்கூர் திவான் இராமசுவாமி அய்யர் தஞ்சாவூரில் நிகழ்த்திய சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு.

இ. இலக்கிய இலக்கண அருங்கலேப் போதனுமுறை யாராய்ச்சிக் குறிப்புக்கள்

I. வார்தாக் கல்வித் திட்டத்தை, பிள்ளேகளே வேலே வாங்கிப் பயன்பெற விரும்பும் திட்டமென்றும் முதல் நான்கு வருடங்களில் அவர்களுடைய வேலே ஒரு காசுக்கும் பயன்படாதென்றுங் கூறுவர். அதனே அவ்வகையாகக் கவனித்தல் மட்டும் போதாதென்போம். கல்வி நலனேப் பெருக்குமா வென்று பார்த்தலும் வேண்டும். எதானுமொரு முயற்சியிலிருந்து கல்வி நலம் பெறவேண்மென்ருல், அது புதுப்புதுப் பொருள்களே யுண்டுபண்ணும் முயற்சியாக இருத்தல் வேண்டும். அந்த முயற்சியும் விளேயாட்டுப் போக்காக மகிழ்ச்சியுடன் செய்யக்கூடியதாகவுமிருத்தல் வேண்டும். புதுப்புதுப் பொருள்கள் செய்வதற்கு பலவேறு வகைப்பட்ட முயற்சியாகவும் இருக்க வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு வகை அதிகப்படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு கல்வி நலனும் அதிகமாகும்; ஆனுல், அவற்றிலிருந்து ஏதேனும் வரவைப் பெருக்குவதென்பது அவ்வளவுக் கவ்வளவு முடியாதும் போய்விடும்.....குழந்தைகளேத் தேவைப் பொருள்களேச் செய்யும் தொழிலில் பழக்குவதால், அவர்களுக்கு அவசியமான கல்வி யெல்லாம் கொடுத்திடக் கூடியதுமில்லே; அவர்கள் ஒரு

வேலை தொழிலாளியாகலாம்; ஆளாக, மனிதராகக் கூடியதில்லை.

முதியோர் கல்வி யென்பது, எழுதப்படிக்கத் தெரியாமையைப் போக்குவதாக மட்டும் இருந்தால் போதாது. அது, கிராமவாசிகளுக்குத் திருத்தமான விபசாய முறைகளில் பயிற்சி தருவதாகவும், அவர்களைச் சுகாதார முறைகளிலும் சமூக முன்னேற்றத்திற்குத் தடையா யிருப்பவற்றைத் தவிர்த்துக்கொள்ளுவதிலும் குடிமையுரிமையிலும் கடமையிலும் பழக்குவதாகவும் இருத்தல்வேண்டும்... முதலாவதாக, பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கூடிய சம்பளம் கொடுக்கவேண்டிய தவசியம் தானென்று உணரக்கூடியதாக ஆசிரியர்களுடைய வேலைகளிருக்க வேண்டும்.

Syed Abdul Aziz.

II. அ. பறவைகள்: குயில்போன்ற பறவைகள் அதிகாலையில் பாடும். புறாக்கள் விடிந்தபின் பாடத் தொடங்கும். மைனாவும், பூஞ்சிட்டும் மத்தியானம் பாடும். ஆந்தை போன்றவை இரவில் பாடும்.

மைனா போன்றவை, வேகமாய்ச் செட்டையடித்துப் பறக்கும். மரங்கொத்திபோன்றவை, மைனாவைப்போல் பறக்காமல், மெதுவாய்த் தொங்கித் தொங்கிப் பறக்கும். பருந்து போன்றவை, பறக்கும்பொழுது செட்டையசைவதே தெரியாது.

பச்சைக் காடை பறக்கும்பொழுது சத்தம் கேட்கும். ஆந்தையோ அமைதியாய்ப் பறக்கும். கிளி பேசிக்கொண்டே பறக்கும்.

சில பறவைகள் நடக்கும். சில பறவைகள் தவ்விப் போகும். சில பறவைகள் தரையில் தங்காமல் மரக்கிளைகளில் தங்கும். சில மரத்தின் உச்சியிலிருக்க விரும்பும். சில தாழ்ந்த கிளைகளில் தாவி விளையாட ஆசைப்படும்.

வல்லூறு போன்றவை, செத்த பிராணிகளின் மாமிசம் தின்னும். சில உயிரோடே பிடித்துத் தின்னும். புறாக்கள் தானியத்தையும் விதைகளையும் தின்னும். மரங்கொத்தி மரத்தில் துவாரமிட்டு அதற்குள் மறைந்திருக்கும் பூச்சிகளைக் கொன்று தின்னும். மீன்கொத்தி நீர்க்குள் பாய்ந்து மீனைப் பிடித்துத் தின்னும்.

வல்லூறு உயரமான மரங்களின் உச்சியில் கூடுகட்டும். கொண்டை வளர்த்தான் செடிகொடிகளில் கூடுகட்டும். சிட்டுக்குருவி கூரைகளிலும் கிணறுகளிலும் கூடுகட்டும். சில பறவைகள் கூடு கட்டாமல் மற்றப் பறவைகளின் கூடுகளில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்க விட்டுவிடும்.

இப்படியாகப் பறவைகளின் குணாதிசயங்களை மாணவ மாணவிகள் கவனித்துக் குறிப்புக்கள் எழுதிவரவேண்டும்.

(வித்தியாதனம்) Lena A. Boyd.

ஆ. பறவைகளின் பராமரிப்பு: பறவைகளால் அநேக நன்மை யுண்டு. பயிரை யழிக்கும் பூச்சிகளைப் பறவைகள் தின்னுகின்றன.

கழுகு பருந்து காகம் முதலியன செத்த பிராணிகளைத் தின்று சுத்தப்படுத்துகின்றன. துர்நாற்ற மிராது, வியாதியும் அணுகாது, கொசுக்களைத் தின்று பிழைக்கும் பறவைகளுமுண்டு. அதனால் குளிர் காய்ச்சல் (Malaria) பரவாது.

பறவைகளைப் பார்ப்பதே கண்ணுக்குக் குளிர்ச்சி. மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கும் பறவைகளுமுள; எலி, சுண்டெலி, பாம்பு தின்னும் பறவைகளுமுள.

(வித்தியாதனம்) Lena A. Boyd.

நித்திரைவிட் டிந்நாட்டார் நேர்ந்துபிற நாட்டார்போல்
பத்திரிகை பார்ப்பதற்குப் பண்புறுவ தெக்காலம்!

ஓர் கிராமவாசி.

ஈ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

I. விரதச்சாரி இயக்கம்: இது நம் இந்தியாவிலுள்ள பற்பல மொழிகள் வழங்கும் பற்பல நாட்டின் கலைகளை அடிப்படையாகக்கொண்டு அதன் மூலம் நம் ஒற்றுமையை நிறுவும் நோக்கமுடைய இயக்கமாகும். பலமொழி நாட்டு மக்கள் தொன்றுதொட்டுப் பெற்று வரும் தங்கள் கலையின் தனிப் பெருமையை அறிந்து, அந் நாட்டு மக்கள் அக்கலையின் வளர்ச்சியால் தற்போதும் எதிர்காலத்தும் முன்னேற முயற்சிப்ப, விரதச்சாரி இயக்கம் பல்மொழி நாட்டின் பல்கலைச் சேர்ப்பு பல இதழ்கள் அமைந்த அழகிய மணம் வீசும் தாமரை மலரை ஒக்கும்.

வெளிநாட்டுக் கலப்பு நிறைந்த பட்டினங்களின் வாழ்க்கையைத் தழுவி அமைக்கப் படாமல் நம் நாட்டுக் கலை நிறைந்து உலவும் நாட்டுப்புறங்களில் சிறந்த கலைகளைத் தழுவி அமைக்கப்பட்ட இயக்கமாதலின் நமக்கு இவ்வியக்கம் மிகவும் ஏற்றதாகும்.

நம் இந்தியக்கலை உலகக் கலைகளினிடையே மணத்துடன் பொலிந்திட வேண்டுமாயின் அக்கலை நம் நிலத்தில் விளைந்து வளர்ந்த பல கிளைகளைத் தாங்கி, மணம் வீசும் பல மலர்களையும், இனிமையான பல கனிகளையும் கொண்ட ஒரு பெரிய மரத்தைப் போல் நம் நாட்டுக் கலையாக விளங்கவேண்டும். இமைய மலையில் ஒரு மூலையில் தோன்றி வெள்ளப் பெருக்கெடுத்துக் கடலில் சேர்ந்து கலக்கும் கங்கையைப் போல், நம் நாட்டுக் கலை ஆதி காலந்தொட்டு இடையில் எவ்விதத்தங்கு தடையுமின்றி வளம்பெற்று வளர்ச்சி பெற்றால் தான், நம் நாட்டுக் கலை சிறந்து விளங்கும்.

இதனால் விரதச்சாரி இயக்கம் மக்களைப் பண்டைக் காலத்திற்கு அழைத்துப் போவதாக நினைக்கக்கூடாது. அன்றியும் பல நாட்டுக் கலையினையோ, கொள்கைகளையோ வெறுப்பதாக எண்ணக்கூடாது. பிற நாட்டுக் கலையில் சிறந்தவையை நாம் ஏற்றுக் கொள்ளலாம். அதனால் நம் நாட்டுக் கலையும் பயனடையக் கூடும். ஆனால், நம் நாட்டுக் கலைக்குப் பதிலாகப் பிற நாட்டுக் கலையை நம் நாட்டில் புகுத்துதல் கூடாது. நம் நாட்டுக்கலையை நாம் ஓம்பல் வேண்டும்.

நாட்டில் தற்போது வளர்ந்து விளங்கும் மற்ற இயக்கங்களினின்றும் விரதச்சாரி இயக்கம் சாரண இயக்கத்தைப் போல் கல்விப் பயற்சிக்கு உடந்தையான ஒரு இயக்கம் மட்டு மன்று. உடற்பயிற்சி இயக்கம் மட்டுமன்று. தாய் மொழி உணர்ச்சி ஊட்டித் தாய் மொழி வளர்க்கும் தனி இயக்கம் மட்டுமன்று. இது ஒரு மக்கள் இயக்கமாகும். மக்களின் மனம், அறிவு, குணம், உடல்வன்மை ஆகியவை வளம்பெற்று விளங்க உதவும். சிறந்தவை யாவும் தன்னுட்கொண்ட இயக்கமுமாகும். தொழிலின் சிறப்பைப் போற்றும் இயக்கமுமாகும். சமய வேற்றுமை, குல வேற்றுமை நிறவேற்றுமை நீக்கி ஒற்றுமை நாடும் இயக்கமுமாகும். ஒவ்வொரு சமயத்தையும் பாராட்டும் இயக்கமாகும். எச்சமயத்தாரும் பிற சமயத்தாரிடம் அன்பும் மரியாதையும் நட்பும் காட்டி வாழ வேண்டும் என்பதை வற்புறுத்தும் இயக்கமாகும். நம் இந்திய மக்களிடை ஒற்றுமையை நிலை நாட்ட இவ்வியக்கமே சிறந்ததாகும். குறுகிய நாட்டுப் பற்றை நீக்குவதாகும். விரதச்சாரி தன் ஊரையும், கிராமத்தையும், நாட்டையும், உலகையும் விரும்பிப் போற்றல் வேண்டும். சிறிய தன் நாட்டுப் பற்றிலிருந்து பரந்த உலகப் பற்று கொள்ளும் உன்னத நிலையும் அடையவேண்டும். விரதச்சாரி தன் நாட்டுத் தனிப் பற்றுடையவன்; ஆயினும் அவன் உலகமளாவிய நோக்கும், நடத்தை நிலையும் உடையோன். தமிழ் நாட்டு விரதச்சாரி தமிழ் நாடு பாரத நாட்டின் ஒரு பகுதியாதலின் தமிழ் நாட்டைத் தனிப் பற்றுடையான். பாரத நாடு உலகின் ஒரு பகுதியாதலின் பாரத நாட்டிடைப் பற்றுடையான்.

உலகம் உலக மாந்தரின் பொதுப் பகுதி யாதலின் உலகிடைப் பற்றுடையான்.

ஆகவே, விரதச்சாரி இயக்கம் குறுகிய மனப்பான்மையை வளர்க்கும் இயக்கமாயில்லாது பரந்த மனப்பான்மையை விரும்ப வளர்க்கும் இயக்கமாகும். இது இன்ப இயக்கமாகும். இன்பக் களிப்பே உலகவாழ்க்கையின் இன்றியமையாக் குறிக்கோளும், உலக மாந்தரிடை ஒற்றுமையும் நிலைக்கச் செய்யும் சிறந்த வழியுமாதலின் இவ்வியக்கம் களிப்பு இயக்கமாக விளங்குகிறது. நிறைந்த நேரிய வாழ்க்கையைப் பெற அவசியமாகிய அறிவு, உழைப்பு, உண்மை, ஒற்றுமை, களிப்பு ஆகிய ஐந்து விரதங்களை (விதிகளை) அடிப்படையாகக் கொண்டது இவ்வியக்கம். ஆணையும் பெண்ணையும் நிறை மனிதராக விளங்கிடச் செய்யத் தோன்றியதாகும் இவ்வியக்கம். "அறிவுடையார் எல்லாம் உடையார்" ஆதலின் அறிவினை முதலமைத்து அதன்மூலம் மற்றவற்றைப் பெற வழி காட்டுகிறது. நம் நாட்டில் சோம்பித் திரியும் கூட்டம் சுற்றித் திரிவதை நீக்க, அறிவையடுத்து உழைப்பு அமைக்கப்பட்டது. இவ்வுழைப்பு தன்னலமற்ற முறையிலே அமைவதாகும். "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று" என்ற வள்ளுவர் உண்மையை அறிந்து உண்மையை ஐந்தின் இடையில் அழகுபட அமைக்கலாயிற்று. இவை மூன்றும் மக்களிடை மிளிருமாயின் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்னும் உண்மை அறிவு பிறக்கும். ஆதலின், ஒற்றுமை நான்காவதாக அமைக்கப்பட்டது. அறிவு பெற்று, உழைப்புற்று உண்மை ஓம்பி ஒற்றுமையாய் வாழ்ந்திடக் களிப்பு நிறைந்திடும். களிப்பற்ற வாழ்க்கை உயிரற்ற வாழ்க்கையாதலின் களிப்பு ஐந்தில் ஒன்றாயது. இத்தகைய வாழ்க்கையை இயக்க முறைப்படி பெறக்கூடும். பெற்றிடின் மக்கள் நிறை மனிதர்களாக விளங்கிடுவார்கள்.

சஞ்சீவிகாமத் நடராசன்.

II. நாடகம்

மதுரை, ஸ்ரீ பாலஷண்முகானந்த சபா

(T. K. S. & Bros.)

நாடகம் என்பது தமிழ் என்னும் நமது தாய் மொழியின் ஓர் அவயவம். இது முத்தமிழ் எனப் பெயர் பெற்று இயல், இசை, நாடகம் எனப் பெயரளவில் பிரிவுபட்டிருப்ப தன்றிப் பொருளளவில் அங்ஙனமன்று. பிரம்ம, விஷ்ணு, ருத்திரன் என முப்பெயர் பெற்றிருப்பினும் மூவரும் ஒருவனாகிய அம் முழு முதற் கடவுள் ஒருவனன்றோ? அங்ஙனமே நமது தாய் மொழியாகிய அன்னை இயல் என்னும் பாதத்தையும் இசை என்னும் மார்பினையும் நாடகம் என்னும் சிரசையும் வகித்து முழு அங்கமாக உருவகம் பெற்றுத் துலங்குகின்றாள். கண், செவி, வாய், மூக்கு, மெய் என்னும் ஐம்பொறிகளினும் முன்னைய நான்கும் சிரசினிடத்தில் அமைந்திருப்பது பற்றியே "எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்கிற பழமொழி ஏற்பட்டிருப்பது போன்று ஏககாலத்தில் கடவுளுடைய, தேவர்களுடைய, மக்களுடைய மகிமைப் பிரதாப வாழ்க்கைச் சித்திரம், வரலாற்று நிகழ்ச்சி முதலிய பழய காலப் பழக்க வழக்கங்களை இயல்பாகவே இன்று நிகழ்வதுபோல் காட்சியளவிலும் கேள்வியளவிலும் கண்டும் கேட்டும் ஆனந்திக்கச் செய்ய வல்லது நாடகமாதலின் நாடகத்தை உலக காரியங்களைச் சொல், அபிநயம், ஆடல், பாடல்களுடன் திருப்பிக் காட்டும் உயரிய ஓர் விருப்பக் கண்ணாடி (Mirror) என உவமை கூறிப் பாராட்டி வருகின்றோம்.

இத்தகைய தத்துவங்களடங்கிய முத்தமிழுஞ் செறிந்த இந்நாடகம் இடைக் காலத்தில்

எவ்வாறே எடுப்பார் கைப் பிள்ளையைப் போன்று படிப்படியாகச் சாதாரண மக்கள் கைவசப்பட்டுத் தெருக்கூத்தளவிலும் வந்து திண்டாட நேர்ந்துவிட்டது. இந்நிலையில் சினிமாப்படக்காட்சி ஒன்று செகத்தில் தோன்றவே இப்போதைய உலகம் சினிமா உலகம் என்று பெயர் பெற்று நாடகம் என்கிற நாமம் அதுதானே மறைந்துபோக மக்களும் அதனை அடியோடு வெறுத்து மறந்துவிட்டனர். ஆகவே நமது தமிழ் அன்னை "நாடகம் என்னும் தனது சிரசையே இழந்து இப்போது தனித்த முண்டமாய் நின்று தவிக்கின்றாள்" என்றுதான் முடிவுகூறுதல் வேண்டும். இத்தருணம் கடலில் மூழ்கி உயிர்விடும் ஒருவனை உயிருடன் கரையில் கொணர்ந்தாங்கு, அத்தாய்க்கு மீண்டும் அவள் இழந்த சிரசைக் கொடுத்து அவளுக்குப் புத்துயிரளித்தவாறு மதுரை T. K. S. & Bros. ஸ்ரீ பாலசண்முகானந்த சபையார் தோன்றிப் பல நகரங்களில் தமது நாடகத்தைப் பிரத்தியட்சமாக நடத்தி உலகப் பிரசித்தி பெற்று வருவதோடு தற்போது மதுரையில் வந்து ஸ்ரீ கோபால கிருஷ்ண தியேட்டரில் பல சரித்திரங்கள் நடத்தியும் சிவலீலா என்னும் தெய்வ பக்தி நிறைந்த சைவத் திருவிளையாடலை "இயற்கையில் தோய்ந்து எங்கும் நிறைந்து மனத்திற்கும் வாக்குக்கும் எட்டாது மறைந்தொளிரும் முழுமுதற் கடவுளைச் செயற்கையில் தோய்ந்து செம்பதம் சிவப்ப விறகையும் சுமந்து வெளிப்பட்டு வந்து வீதிதொறும் துலங்கி மிளிரும்" வண்ணம் 108 நாள் தொடர்ந்து நடத்தியும் எல்லாருள்ளத்திலு முள்ள கள்ளங் கபடுகளைப் போக்கி அதற்குப் பதிலாக அவ்வுள்ளத்தில் சிவபோக வெள்ளத்தைத் தேக்கி நிரப்பிவைத்திருக்கின்றனர். சீன்களின் சிறப்பைச் செப்ப ஒண்ணாது! இமைக்கு முன் ஆங்கே இமையவரை தோன்றும்! இமைத்து விழிக்கு முன் ஆங்கே விண்ணுலகு தோன்றும்! நொடிக்கு முன் ஆங்கே நூதன மாடமாளிகை தோன்றும்! நொடித்து முடிக்குமுன் ஆங்கே மூவுலகும் தோன்றும்! என்னே விந்தை! என்னே விந்தை!! இவர்கள் நடத்திய சிவலீலா 108வது நாடகத்தன்று மதுரைத் தமிழ்ச்சங்கத்தலைவர் ஸ்ரீ T. C. ஸ்ரீனிவாச ஐயங்கார் M. L. C. அட்வகேட் அவர்கள் தலைமையில் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைமை ஆசிரியரும் நமது இந்தியச் சக்கரவர்த்தியவர்களிடம் "செந்தமிழ்ச் சக்கரவர்த்தி" என்னும் பட்டமும் தோடாப் பரிசும் தூய பரிவட்டமும் பெற்றவருமாகிய பிரமஸ்ரீ திருநாராயண ஐயங்கார் சுவாமியவர்களால் 'முத்தமிழ்க்கலா வித்வத்ரத்ன' T.K.S. & Bros. என்னும் கிட்டுதற்கரிய உயர்தரப் பட்டமும் வழங்கப் பெற்றனர். என்னே மகிமை! என்னே மகிமை! இச்சபையார் இங்கு இப்போது சம்பூரண இராமாயணம் நடத்தி வருகின்றனர். நிற்க, நுருவி ஆராய்ந்தால் "ஸ்ரீமன் நாராயணனே உலக மக்களுக்கு அறம் பொருள் இன்பம் வீடு என்கிற தர்ம சாதனங்களைக் கண்கூடாக நடத்திக் காண்பிக்கும் பொருட்டு இராம லட்மண பரத சத்ருக்கனர் என்ற நான்கு சகோதரர்களாய் அவதரித்தருளியது போன்று 'நாடகக்கலை நன்மார்க்கரைத் துன்மார்க்கராக்கி வைக்கும் ஆபாசக் களஞ்சியம்' என அறியாமையால் அருவருப்புக்கொண்டிருக்கும் மக்களுக்கிடையில் 'நாடகக்கலைதான் கல்லாத மாந்தரது மனமும் கரைந்துருகும்படி ஆங்கே நல்ல ஒழுக்கங்களின் விழுப்பங்களை நயந்து கட்புலனோடுங் கலந்து காட்டி எல்லையில்லாத இருநில மக்களது அல்லல் அபலங்களை அறவேயகற்றித் துன்மார்க்கரையும் நன்மார்க்கராக்கி வைக்கும் தூய்மை நிறைந்த பக்தி ஞானக் களஞ்சியம்' என அனைவரும் ஒப்புக்கொள்ளுமாறு நவீன நாகரிக முறையில் நடத்திக் காட்டும் பொருட்டு நமது தமிழன்னையே, சங்கரன், முத்துசாமி, சண்முகம், பகவதி என இந்நான்கு சகோதரர்களையும் ஈன்றெடுத்து இனிது வளர்த்து வருகின்றாள்" என்றுதான் நாம் சான்றுகூறி மகிழவேண்டும்.

இன்னும் இவர்கள் சிவபெருமான் பக்தரை இரட்சிக்கும் பொருட்டு இம்மதுரையம் பதியில் ஆடிக் காட்டிய திருவிளையாடல்கள் அனைத்தையும் பாகம் பாகமாக வகுத்துப் படித்தவர் படியாதவர் அனைவரும் கண்டு கேட்டுக் களிப்படைந்து நல்லறிவு கொள்ளும் வண்ணம் நடித்துக் காட்டுமாறு எல்லாம் வல்ல இறைவன் இவர்களுக்கு நீண்ட ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும் இனிது தந்தருள்வாராக! பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

இங்ஙனம்
நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ் வித்வான் மதுரை.

III. மேடமதி பதின்மூன்று தேதிக்கு மேற்பரணி மேவு நான்மழை பெய்யினும்
மேன்மை வைகாசி மதி பௌரணை கழித்தபின் விரவு நாலா நாளினில்
நாடி மழை பொழியினு மானி ஏகாதசியி ருளிரவி சாய் பொழுதிலே
நண்ணு மந்தாரமோடு மழைவரினு மாடிதனில் ஞாயிறைந்தாந் தேதியில்
தேடரிய வாவணியில் மூல நாளிரவினும் சேர்ந்துகல் மாரியுறினும்
தேசஞ் செழிக்குமா தானியம் விருத்தியாய்த் தேருமவ் வருடமென்பர்
வாடுதமியேன்மகிழ வோருநாட்கனவிலே வந்துதிரு நீறுதந்தாய்
வரைராச குமரிமடி மீதுவிளையாடல்புரி மணிகொண்ட வடிவேலனே.—வடிவேலர் சதகம்.

சித்திரை மாதம் பதின்மூன்று தேதிக்குமேல் பரணியிலும்,
வைகாசி மாதம் பௌர்ணமி கழித்த நாலாம் நாளிலும்,
ஆனி மாதம் ஏகாதசி நாள் மாலையில் மந்தாரத்தோடும்,
ஆடி மாதம் ஐந்தாம் தேதி ஞாயிற்றுக்கிழமையிலும்,
ஆவணி மாதம் மூலநாளிரவிலும்
மழை பெய்யின், தேசஞ் செழிக்கும்; தானியம் விருத்தியாகத் தேரும்.

IV.
1. விசாக மழை பயிருக்குப் புழு.
2. அழுகைத் தூற்றல் அவ்வளவும் பூச்சி.
3. சுவாதி வில்லுக்குச் சொன்னபடி மழை.
4. புரட்டாசி வில்லுக்கு உணவுமற்றுப் போகும்.
5. காலைச் செவ்வானம் கடலுக்குப் பெய்யும்.
6. அந்திச் செவ்வானம் அப்பொழுதே மழை.
7. தட்டான் தாழ, தட்டாத மழை.
8. சித்திரை மின்னலாகாது; மார்கழி இடிக்கவுமாகாது.
9. கும்பத்து வெள்ளி குடம்கொண்டு சாய்க்கும்.
10. கன்னிச் செவ்வாய் கடலும் வற்றும்.
11. பரணி பெய்தால் தரணி விளையும்.
12. வைகாசி மாதம் மதி குறைந்த நாலாம் நாள் பெய்யுமேயாகில் பெருமழையாம்.
13. ஆடி அமாவாசை மழை பெய்தால் அரிசி விற்ற விலை நெல் விற்கும்.
14. அற்பிசிப் பனி அத்தனையும் மழை.

V.
1. கல்வியை மென்மேலும் கற்பதால் அல்லாமல், எவரும் தமக்கேனும் பிறருக்கேனும் பயனுடையவராவது இயலாது. John Ruskin.
2. பிறர் குணங்களையே எடுத்துக் கூறுவர், பெரியோர்;
பிறர் குற்றங்களையே எடுத்துக் கூறுவர், சிறியோர்.
3. பெரியோர் பிறர் சொல்லாமலே பல நன்மைகளைச் செய்வர்;
சிறியோர் பிறர் சொல்லிச் செய்வர்; கீழ் மக்கள் பிறர் சொல்லியுஞ் செய்யார்.